# 8

# நிதியியல் துறைச் செயலாற்றமும் முறைமை உறுதிப்பாடும்

குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகளைக் கொண்ட சூழலொன்றில் 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் நிதித் துறையின் செயலாற்றம் மிதமானதாகக் காணப்பட்டது. நிச்சயமற்ற அரசியல் நிலைமைகளிலிருந்து தோன்றிய முதலீட்டாளர் மனோபாவமும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் நிதியியல் நிறுவனங்கள் மீதான அழுத்தத்தினை மேலும் அதிகரித்தன. வங்கித்தொழில் துறை, நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை இரண்டினதும் மொத்தச் சொத்துக்களின் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்து காணப்பட்டது. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வங்கித்தொழில் துறையின் கொடுகடன் வளர்ச்சி குறைவடைந்து காணப்பட்ட அதேநேரம் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை எதிர்மறையான கொடுகடன் வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மேலும், இரண்டு துறைகளினதும் செயற்படாக் கடன்கள் உயர்ந்த மட்டத்திற்கு அதிகரித்தனவெனினும், சமாளிக்கக்கூடியதாக விளங்கின. மேலும், வங்கித்தொழில் துறை மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை இரண்டினதும் இலாபத்தன்மை 2018இன் தொடர்புபட்ட காலத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. எனினும், வங்கித்தொழில் துறை பாசல் III இன் கீழ் அதிகரிக்கப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகியதுடன் பெரும்பாலான முன்மதியுடைய குறிகாட்டிகளைக் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மட்டத்திலும் மிக மேலாகப் பேணியது. அதேவேளை, குறிப்பிட்ட நலிவடைந்த நிதிக் கம்பனிகளை மீளெழுச்சிப்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் அவசியமான முன்மதியுடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நிதியியல் துறையின் நீண்ட கால உறுதிப்பாட்டினைப் பேணுவதற்காக கடன் தீராற்றலற்ற கம்பனிகளின் தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டன. காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்கள் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பதிவுசெய்த அதேவேளை ஏனைய நிதியியல் நிறுவனங்களான முதனிலை வணிகர்கள், கூறு நம்பிக்கைகள், ஓய்வூதிய நிதியங்கள் போன்றன அவற்றின் செயலாற்றத்தினை முன்னைய மட்டங்களில் பேணக் கூடியதாயிருந்தன. கொள்கை வீத மாற்றங்கள், நியதி ஒதுக்கு விகிதத்தின் குறைப்பு, பொருத்தமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், திரவத்தன்மை வசதியின் அறிமுகம் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவுகள் என்பன நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பண வீதத்தினை ஓர் கீழ் நோக்கிய சீராக்கலுடன் துணைநில் வீத வீச்சின் நடுவில் பேண உதவியது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் அவதானிக்கப்பட்ட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பிரகாசமற்ற செயலாற்றம் 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியிலும் தொடர்ந்தது. திறைசேரி உண்டியல்களின் முதலாந்தரச் சந்தை விளைவு வீதங்களும் உள்நாட்டுச் சந்தையில் திறைசேரி முறிகளின் விளைவுகளும் ஆண்டின் தொடக்கத்தில் அவதானிக்கப்பட்ட அதன் அதிகரித்த போக்கிலிருந்து மாற்றமடைந்து, 2019இன் முதலரைப்பகுதியின் பிற்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. 2018இல் குறிப்பிடத்தக்களவில் தேய்வடைந்த செலாவணி வீதம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் மற்றும் ஓகத்து மாதத்தில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் மீளப்பெறப்பட்டமையினைத் தொடர்ந்து செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்ட போதும் 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் பெறுமதி அதிகரித்தது. எனினும், மத்திய வங்கியின் மிதமான வெளிநாட்டுச் செலாவணித் தலையீட்டின் மூலம் செலாவணி வீதத்தின் மீதான இவ்வழுத்தம் விடுவிக்கப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆறாவது தொகுதியின் பெறுகைகள், 2019 மாச்சு மற்றும் யூனில் இடம்பெற்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் தேறிய வாடிக்கையாளர் உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் உதவியுடன் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி பேணப்பட்டது.

## நிதியியல் நிறுவனங்களின் அபிவிருத்திகள்


### வங்கித்தொழில் துறை

- **வங்கித்தொழில் துறை 2019ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மிதமான வளர்ச்சி வேகத்தைப் பதிவுசெய்தது.** எனினும், துறையானது ஒழுங்குமுறைப்படுத்தலின் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கு மிக மேலாக மூலதனத்தையும் திரவத்தன்மையினையும் பேணிய அதேவேளையில் அதன் மூலம் துறையின் தாங்குதிறன் தன்மையினை உறுதிசெய்தது. கொடுகடன் மற்றும் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்களை உள்ளடக்கிய வங்கித்தொழில் துறையின் சொத்துத்தளம் வைப்புக்களினால் பெரும்பாலும் நிதியிடப்பட்டதுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மெதுவான வேகத்தில் வளர்ச்சியைத் தொடர்ந்தது. பாதகமான வானிலை நிலைமைகள், அரசியலின் நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் 2019 ஏப்பிறலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட பாதகமான வணிகச் சூழலின் விளைவாக சொத்துக்களின் தரம் குறைவடைந்ததுடன் அது செயற்படாக் கடன்களின் வளர்ச்சி மூலம் பிரதிபலித்தது. கடன் வளர்ச்சி குறைவடைந்து செல்வதை மாற்றியமைக்கும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கி பல வழிமுறைகளை மேற்கொண்டது. இவ்வாறான வழிமுறைகளிலொன்றான நியதி ஒதுக்கு வீதத்திலான குறைப்பானது வங்கிகளுக்கு வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளில் கூடுதல் நிதியை முதலீடு செய்ய உதவியதுடன் உள்நாட்டு பணச் சந்தையில் ரூபாவின் திரவத்தன்மையினை மேம்படுத்த உதவியது. கொள்கை வீதங்களிலான குறைப்பு, வங்கிகளின் நிதிச் செலவைக் குறைக்க உதவியது. தொழிற்பாட்டுச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, கடன் இழப்பு ஏற்பாட்டிலான அதிகரிப்பு மற்றும் வரி போன்ற பிரதான காரணங்களால் முதல் எட்டு மாதங்களுக்குள் துறையினுடைய இலாபத்தன்மை குறைவடைந்தது. எனினும், பாசல் III கட்டமைப்பின் அமுலாக்கம் வங்கித்துறையின் தாங்குதிறனை மேலும் உயர்த்தியது. வங்கிக் கிளைகள், தன்னியக்கக் கூற்றுப் பொறி வலையமைப்பு மற்றும் இலத்திரனியல் வங்கி அலகுகள் என்பன முறைமைக்குள் சேர்க்கப்பட்டதன் மூலம் வங்கிக் கிளை மற்றும் தன்னியக்கக் கூற்றுப் பொறி வலையமைப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டதுடன் இதன் மூலம் நாட்டின் நிதியியல் வசதிகளின் கிடைப்பனவு அதிகரித்தது.

- **2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் 2018இன் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது மிதமான வளர்ச்சியைக் காட்டியிருந்தது.** 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் துறையின் மொத்தச் சொத்துக்கள், 2018இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 7.3 சதவீதமான (ரூ.747.5 பில்லியன்) வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது 2.4 சதவீதத்தினால் (ரூ.277.8 பில்லியன்) ரூ.12.1 றில்லியனுக்கு விரிவடைந்தது. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் காணப்பட்ட சொத்துக்களின் அதிகரிப்பானது முக்கியமாக முதலீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பினால் பங்களிக்கப்பட்ட அதேவேளை கடன்கள் மற்றும் முற்பணங்களின் மெதுவடைவானது வங்கித்தொழில் துறையின் சொத்துத் தளத்தின் விரிவாக்கத்தைப் பாதித்தது. வங்கித்தொழில் துறையின் சொத்துத் தளமானது முக்கியமாக வைப்புக்களினூடாகவும் (ரூ.8.8 றில்லியன்)

வரைபடம் 8.1


வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.2

வங்கித்தொழில் துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8


கடன்பெறுகைகளினூடாகவும் (ரூ.1.6 றில்லியன்) நிதியிடப்பட்டது. ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான சொத்துக்களின் வளர்ச்சியானது 2017ஆம் ஆண்டின் 13.8 சதவீதத்திலிருந்து 2018ஆம் ஆண்டு 14.6 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் அது 2019ஆம் ஆண்டு படிப்படியாக வீழ்ச்சியடைந்து ஓகத்து இறுதியில் 9.3 சதவீதத்தை அடைந்தது.

- **2018ஆம் ஆண்டின் இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான கடன் வளர்ச்சி 19.6 சதவீதத்தை எட்டியிருந்த போதும் 2019ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் நிலவிய பாதகமான வணிகச் சூழல் காரணமாக 2018இன் இறுதியிலிருந்து கடனிற்கான கேள்வி மிதமடைந்து 2019இன் ஓகத்து மாத இறுதியில் 9.7 சதவீதத்திற்குக் குறைந்திருந்தது.** துறையின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியான ரூ.673.5 பில்லியனுடன் (10.5 சதவீதம்) ஒப்பிடுகையில் 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.102.7 பில்லியனால் (1.3 சதவீதம்) மாத்திரம் அதிகரித்து ரூ.7.8 றில்லியனை எட்டியிருந்தது. 2019இல் கடன்களின் வளர்ச்சியானது ரூபாய் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பினால் உந்தப்பட்டதுடன் இது கடன்களின் மொத்த அதிகரிப்பை விட விஞ்சி காலப்பகுதியில் 1.9 சதவீதம் கொண்ட ஓர் வளர்ச்சியைப் பதிவுசெய்தது. கடன்கள் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்ட வளர்ச்சியானது வங்கிகளால் மத்திய அரசு மற்றும் அரசுடமை நிறுவனங்களிற்கு கொடுக்கப்பட்ட கடன்களால் அதிகரித்த அதேவேளை தனியாருக்கான கடன்வழங்கல் இக்காலப்பகுதியில் குறைவடைந்திருந்தது. கடன் சாதனங்களின் அடிப்படையில், ரூ.64.1 பில்லியனால் குறைவடைந்த மேலதிகப் பற்றைத் தவிர ஏனைய அனைத்து முக்கிய கடன் சாதனங்களும் இக்காலப்பகுதியில் அதிகரித்திருந்தது. 2019 யூன் மாத முடிவில் வங்கித்துறையின் கொடுகடனானது நுகர்வு (18.4 சதவீதம்), கட்டுமானம் (15.4 சதவீதம்), மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை (15.2 சதவீதம்), தயாரிப்பு (11.0 சதவீதம்), உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் (8.6 சதவீதம்) மற்றும் வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி (8.2 சதவீதம்) போன்ற துறைகளுக்கு முக்கியமாக வழங்கப்பட்டிருந்தது. அதேவேளை, முக்கிய துறைகளுள் கட்டுமானம், நிதியியல் பணிகள் மற்றும் சுற்றுலா என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடன்கள் 2019இன் முதலரைப்பகுதியில் வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் ஏனைய முக்கிய துறைகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன்கள் அதிகரித்துக் காணப்பட்டன.

- **கடனுக்கான கேள்வி குறைவடைந்ததன் விளைவாக நிதிகள் பெருமளவில் முதலீட்டினை நோக்கிச் செலுத்தப்பட்டிருந்தது.** 2018இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட முதலீடுகளான ரூ.31.4 பில்லியனுடன் (1.2 சதவீதம்) ஒப்பிடும் போது 2019ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் முதலீடுகள் ரூ.254.3 பில்லியனால் (9.4 சதவீதம்) அதிகரித்தது.

- **வங்கித்தொழில் துறையின் விரிவாக்கமானது பெருமளவிற்கு வைப்புக்களினால் நிதியிடப்பட்டதுடன் இது 2019 ஓகத்து இறுதியில் மொத்தச் சொத்துக்களின் 73.2 சதவீதத்திற்கு வகைகூறியது.** வங்கித்தொழில் துறையின் வைப்புத் தளமானது 4.0 சதவீத வளர்ச்சியுடன் ரூ.343.9 பில்லியனால் வளர்ச்சியடைந்ததுடன் இவை முக்கியமாக ரூபா வைப்புக்களை உள்ளடக்கியிருந்தது. வங்கிகளின் கலந்தாலோசனையுடன் 2019 ஏப்பிறலில் வங்கி வைப்புக்களின் வட்டி வீதங்களின் மீது விதிக்கப்பட்டு 2019 செத்தெம்பரில் நீக்கப்பட்ட வைப்பு வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச எல்லையானது வங்கிகளின் நிதிச் செலவைக் குறைக்கும் நோக்கத்துடனும் கடன்களுக்கான வட்டி வீதத்தினைக் குறைப்பதற்கு உதவும் நோக்கத்துடனும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதேவேளை, கேள்வி வைப்புக்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், கேள்வி வைப்புக்களிலிருந்து தவணை வைப்புக்கள் குறிப்பாக, 3 மாத முதிர்ச்சியைக் கொண்ட தவணை வைப்புக்கள் போன்ற குறுங்கால சேமிப்புக்களை நோக்கி நகர்ந்தமையும்

வரைபடம் 8.3
வங்கித்தொழில் துறையின் நிதியிடல் மூலங்கள்





*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

வரைபடம் 8.4


வங்கித்தொழில் துறையின் செயற்படாக் கடன்கள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.5

வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை நிலைமை



மூலம்: இலங்கை மத்திய வங்கி

அவதானிக்கப்பட்டது. 2019 ஒகத்து இறுதியிலுள்ளவாறு மொத்த வைப்புக்களின் சதவீதமாக நடைமுறை மற்றும் சேமிப்பு வைப்புக்களின் பங்கானது 2018இன் தொடர்பான காலப்பகுதியின் 32.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 30.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கடன்பெறுகைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியிலான ரூ.58.9 பில்லியன் (3.7 சதவீத எதிர்மறை வளர்ச்சி) வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.142 பில்லியனால் வீழ்ச்சியடைந்து 8.1 சதவீதமான எதிர்மறையான வளர்ச்சியைக் காட்டியது. மொத்தக் கடன்பெறுகையானது முக்கியமாக இலங்கை ரூபா கடன்பெறுகை வீழ்ச்சியின் காரணமாக 11.9 சதவீதத்தினால் (88.1 பில்லியன்) வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளினூடாகச் மீள்செலுத்தப்பட்ட கடன்பெறுகைகளின் காரணமாக, 2019இன் முதல் எட்டு மாதங்களில் வெளிநாட்டு நாணயக் கடன்பெறுகைகள் 4.2 சதவீதத்தினால் (ஐ.அ.டொலர் 235.2 மில்லியன்) வீழ்ச்சியடைந்தது.

- **சொத்துத் தரம் ஓர் மோசமான நிலைமையைக் வெளிக்காட்டிய போதும், சமாளிக்கக் கூடியதாகக் காணப்பட்டது.** செயற்படாக் கடன்கள் 2018 இறுதியின் ரூ.263.1 பில்லியனிலிருந்து 2019 ஒகத்து இறுதியில் ரூ.383.1 பில்லியனுக்கு ரூ.119.9 பில்லியனால் (45.6 சதவீதம்) அதிகரித்து, செயற்படாக் கடன் விகிதம் 2018 திசெம்பர் இறுதியின் 3.4 சதவீதத்திலிருந்து 2019 ஒகத்து இறுதியளவில் 4.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2019இன் முதலரைப்பகுதியில், பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. 2019இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட வரட்சியான காலநிலை காரணமாக வேளாண்மைத் துறையின் செயற்படாக் கடன் விகிதம் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த அதேவேளை உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் காரணமாக சுற்றுலாத் துறையின் செயற்படாக் கடன்களும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. எனினும், செயற்படாக் கடன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ஏற்பாடுகளின் அதிகரிப்பு குறைவாகக் காணப்பட்டதன் விளைவாக சிறப்பு மற்றும் மொத்த ஏற்பாட்டு உள்ளடக்க விகிதங்கள் குறைவடைய வழிவகுத்தது. ஏற்பாடுகளின் அதிகரிப்பு குறைவாகக் காணப்பட்டமைக்கு, புதிய வகைப்படுத்தப்பட்ட செயற்படாக் கடன்கள் மீதான குறைந்த ஏற்பாடுகள், பாதுகாப்புப் பிணைகளின் கிடைக்கக்கூடிய தன்மை என்பன காரணமாக அமைந்தது.

- **வங்கித்தொழில் துறையானது குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மேலாக போதுமான திரவத்தன்மைத் தாங்கிருப்புடன் தொழிற்பட்டது.** 2019 ஒகத்து இறுதியில் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு ஆகியவற்றின் நியதிச் சட்டத் திரவச் சொத்துக்கள் விகிதம் முறையே 31.2 சதவீதமாகவும் 45.7 சதவீதமாகவும் அமைந்து குறைந்தபட்ச நியதிச் சட்டத் தேவைப்பாடான 20 சதவீதத்திற்கு மிக மேலாக விளங்கிய அதேவேளை, திரவச் சொத்துக்களுக்கான மொத்தச் சொத்துக்கள் விகிதம் 2019 ஒகத்து இறுதியில் 29.3 சதவீதமாக இருந்தது. கடனுக்கான வைப்புக்கள் விகிதம் 2018 ஒகத்து இறுதியில் இருந்தவாறான 87.8 சதவீதத்திலிருந்து 2019 ஒகத்து இறுதியில் 88.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. வங்கித்தொழில் துறையின் ரூபா மற்றும் அனைத்து

8

அட்டவணை 8.1

வங்கித்தொழில் துறை - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2017 ஓகத் முடிவில் | 2018 ஓகத் முடிவில் | 2019 திசெ முடிவில் | 2019 ஓகத் முடிவில்(அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2018 ஓகத் | 2019 ஓகத்(அ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 9,901.5 | 11,039.9 | 11,794.0 | 12,071.8 | 11.5 | 9.3 |
| கடன்களும் முற்பணங்களும் (ரூ.பில்லியன்) | 6,140.2 | 7,104.4 | 7,693.4 | 7,796.0 | 15.7 | 9.7 |
| முதலீடுகள் (ரூ.பில்லியன்) | 2,588.4 | 2,608.1 | 2,697.4 | 2,951.7 | 0.8 | 13.2 |
| வைப்புக்கள் (ரூ.பில்லியன்) | 7,063.5 | 8,088.6 | 8,492.4 | 8,836.3 | 14.5 | 9.2 |
| கடன்பெறுகைகள் (ரூ.பில்லியன்) | 1,604.2 | 1,548.2 | 1,763.4 | 1,621.4 | -3.5 | 4.7 |
| மூலதன நிதிகள் (ரூ.பில்லியன்) | 823.2 | 958.9 | 1,030.4 | 1,095.7 | 16.5 | 14.3 |
| அடுக்கு 1 மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%)(ஆ) | 12.3 | 12.8 | 13.1 | 13.3 | | |
| மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%)(ஆ) | 15.1 | 16.0 | 16.2 | 16.5 | | |
| திரண்ட செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 2.8 | 3.6 | 3.4 | 4.9 | | |
| தேறிய செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 0.9 | 1.7 | 1.5 | 2.6 | | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்) (%) | 2.0 | 1.9 | 1.8 | 1.5 | | |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பின்) (%) | 17.6 | 14.6 | 13.2 | 10.8 | | |
| நியதித் திரவச்சொத்துக்களின் விகிதம் (உள்நாட்டு வங்கிப் பிரிவு) (%) | 31.2 | 30.0 | 27.6 | 31.2 | | |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச்சொத்துக்கள் (%) | 29.0 | 27.4 | 25.7 | 29.3 | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) யூன் முடிவில் உள்ளவாறு

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

நாணயங்களுக்குமான திரவத்தன்மை உள்ளடக்க விகிதங்கள் 2019 ஓகத்து இறுதியில் முறையே 202.8 சதவீதம் மற்றும் 169.5 சதவீதமாக இருந்ததுடன் ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சத் தேவைப்பாடான 100 சதவீதத்திற்கு மிக மேலாகக் காணப்பட்டன. தேறிய நிலையான நிதியிடல் விகிதம் 2019 யூன் இறுதியில் 131.4 சதவீதமாகக் காணப்பட்டது.


- **வங்கித்தொழில் துறையின் தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகையானது வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களிலான குறைவுடன் ஒப்பிடுகையில் கூடிய வீதத்தில் வீழ்ச்சி அடைந்த வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களின் காரணத்தினால் 2018 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2019 யூன் இறுதியளவில் வீழ்ச்சியடைந்தன.** 2019இன் முதலரைப்பகுதியில், வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் உள்ளவாறான சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு கடன்கள் வீழ்ச்சியடைந்தமை காரணமாக இருந்த அதேவேளை, குறைவடைந்த கடன்பெறுகைகளின் காரணமாக நிதிநிலைமைக் கூற்றிலுள்ளவாறான வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் குறைவடைந்தன. 2019 யூன் இறுதியில் வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் மற்றும் நிதி நிலைமைக் கூற்றிலுள்ளவாறான வெளிநாட்டு நாணயச் சொத்துக்களின் சதவீதமாக தேறிய வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகையானது முறையே 0.7 சதவீதமாகவும் 0.5 சதவீதமாகவும் காணப்பட்டது. வங்கித்தொழில் துறை 2018 திசெம்பர் இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 63.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 41.9 மில்லியனான கொள்வனவு வெளிநாட்டு நாணய நிலைமையினை அறிக்கையிட்டது. 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வெளிநாட்டு நாணய மீள்மதிப்பீடுகள் தொடர்பில் ரூ.7.3 பில்லியன் பெறுமதியான தேறிய இலாபம் காணப்பட்டது.

- **2019இன் முதல் எட்டு மாதங்களில் காணப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் படிப்படியான கீழ் நோக்கிய நகர்வு காரணமாகத் திறைசேரி முறிகள் மீதான மூலதன இலாபமானது ரூ.3.4 பில்லியனாக விளங்கியதுடன், 2018இன் தொடர்பான காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட ரூ.1.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துக் காணப்பட்டது.** இதற்கு 2019இன் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2018 தொடர்பான காலப்பகுதியில் அரச பிணையங்களின் மீதான முதலீடுகள் அதிகரித்தமையே காரணமாகும். வங்கிகளின் வியாபாரச் சொத்துப்பட்டியலின் பங்குரிமைச் சந்தைக்கான வெளிப்படுத்துகை ரூ.15.8 பில்லியனாகவும் இது 2019 ஓகத்து இறுதியில் முறையே வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் மற்றும் வியாபாரத்திற்காக வைத்திருக்கப்பட்ட முதலீடுகளில் முறையே 0.1 சதவீதமாகவும் 2.4 சதவீதமாகவும் மட்டுமே காணப்பட்டமையால் வங்கித்தொழில் துறையின் பங்குரிமை இடர்நேர்வு மிகக் குறைந்தளவாகவே காணப்பட்டது.

- **குறைவடைந்த வணிகச் செயற்பாடுகள், குறைவடைந்த கடன்வழங்கல், சொத்துக்களின் தரம் மோசமடைந்ததன் மூலம் அதிகரித்த ஏற்பாடுகள் மற்றும் அதிகரித்த வரிகள் என்பன 2019ஆம் ஆண்டின் இலாபத்தில் சரிவை ஏற்படுத்தின.** வங்கித்தொழில் துறையின் 2018ஆம் ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபமானது

வரைபடம் 8.6


வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனம் மீதான வருவாய்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.7

வங்கித்தொழில் துறையின் மூலதனப் போதுமாந்தன்மை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ரூ.125.9 பில்லியனாகக் காணப்பட்டதுடன் 2019இன் முதல் எட்டு மாதங்களுக்கு இது ரூ.74.8 பில்லியனாக விளங்கி 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ரூ.87.0 பில்லியன் இலாபத்துடன் ஒப்பிடுகையில் இது ரூ.12.2 பில்லியனால் குறைவடைந்திருந்தது. தேறிய வட்டி வருமானம் அதிகரித்திருந்த போதிலும் இலாபமானது தொடர்பான முன்னைய ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது குறைவடைந்ததற்கு வட்டியல்லாச் செலவுகளின் (ரூ.14.9 பில்லியன்) அதிகரிப்பும் கடன் இழப்பு ஏற்பாடுகளின் அதிகரிப்பும் (ரூ.13.7 பில்லியன்) காரணமாக அமைந்தன. இக்காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணி வருமானத்தில் ஏற்பட்ட ரூ.3.8 பில்லியன் குறிப்பிடத்தக்களவு குறைவை 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் காணப்பட்ட வர்த்தக/ முதலீட்டுப் பத்திரங்களின் இலாபமான ரூ.3.4 பில்லியன் மூலம் பகுதியளவில் ஈடுசெய்ததன் விளைவாக 2018இன் தொடர்பான காலப்பகுதியின் வட்டியல்லா வருமானத்துடன் ஒப்பிடுகையில் ஒரு சிறிதளவான வீழ்ச்சியைக் காட்டியது.

- **இலாபத்தில் ஏற்பட்ட குறைவு இலாபத்தன்மை வீதங்களில் பிரதிபலித்தது. வரிக்குப் பின்னரான சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மீதான வருமானம் என்பன 2018 ஓகத்தில் காணப்பட்ட முறையே 1.9 சதவீதம் மற்றும் 14.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 ஓகத்தில் 1.5 சதவீதம் மற்றும் 10.8 சதவீதமாகக் குறைவடைந்திருந்தன.** மேலும், இக்காலப்பகுதியில் தேறிய வட்டி வருமானம் 3.7 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 3.6 சதவீதமாகக் குறைவடைந்திருந்தது. தொழிற்பாட்டுச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாகச் செயற்றிறன் விகிதம் 2018 ஓகத்தில் காணப்பட்ட 48.5 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2019 ஓகத்தில் 51.6 சதவீதமாகி மோசமடைந்திருந்தது.


- **ஏதேனும் மோசமான அதிர்வுகளைத் தாங்கும் பொருட்டு வங்கித்தொழில் துறை 2019இல் முதலரைப்பகுதியில் போதுமான மூலதனத்தை பேணியது.** 2019 யூன் இறுதியளவில் வங்கித்தொழில் துறையானது 13.3 சதவீதமான பொதுப் பங்குரிமை விகிதத்துடனும் 16.5 சதவீதமான மொத்த மூலதன விகிதத்தோடும் பாசல் III தேவைப்பாடுகளுக்கு மிக மேலாகத் தொழிற்பட்டது. எனினும், வியாபார வளர்ச்சிக்காக பாசல் III இன் கீழாக அதிகரித்த மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதிகளைத் திரட்டுவதில் நடுத்தர காலத்தில் வங்கிகள் சவால்களை எதிர்கொள்ளக்கூடும். 2019 யூனில் வங்கித்தொழில் துறையின் முடுக்கி விகிதம் 6.9 சதவீதமாகக் காணப்பட்டது.

- **2019இன் முதலரைப்பகுதியில் வங்கிக் கிளை வலையமைப்பு மேலும் விரிவடைந்து நிதியியல் அணுகலை மேம்படுத்தியது.** இதன்படி, 2019இன் முதலரைப்பகுதியில் 332 தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் மற்றும் 13 புதிய கிளைகள் நிறுவப்பட்ட அதேவேளை 9 தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் மூடப்பட்டன.

## உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை

- **எதிர்மறையான கொடுகடன் வளர்ச்சி, வீழ்ச்சியடைந்து செல்லும் இலாபத்தன்மை மற்றும் செயற்படாக்**

வரைபடம் 8.8
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனித் துறையின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**கடன்களின் அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் செயலாற்றமானது தேய்வடைந்தது.** இத்துறையின் மெதுவான போக்கிற்கு 2019இன் முதலரைப்பகுதியில் நிலவிய மந்தமான பொருளாதார வளர்ச்சி நடவடிக்கையே முக்கியமான காரணமாகும். இவை உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. எனினும், மூலதனம் மற்றும் திரவத்தன்மை உட்பட துறையின் முக்கியமான முன்மதியுடைய குறிகாட்டிகள் தொடர்ந்தும் சாதகமானவையாக விளங்கியதுடன் ஒரு சில இடர்ப்பாட்டிலுள்ள/ உயர் இடர்நேர்வுக் கம்பனிகள் நீங்கலாக மற்றையவை குறைந்தபட்ச தேவைப்பாடுகளுக்கு மேலாகப் பேணின. மத்திய வங்கி, பலயீனமான நிதியியல் நிலைமைகளைக் கொண்ட கம்பனிகளை மீளெழுச்சிப்படுவத்துவதனை கருத்திற்கொண்டு முக்கியமான முன்மதியுடைய வழிமுறைகளை தொடர்ந்தும் கண்காணித்தது. இதற்கமைய, நிதியியல் துறையின் நீண்டகால உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தும் விதத்திலும் வைப்பாளர்களினதும் ஏனைய கொடுகடன் வழங்கியோர்களினதும் நன்மைகளைப் பாதுகாக்கும் பொருட்டும் உயர் இடர்நேர்வுகளைக் கொண்ட உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் நிதி வியாபார தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2019 ஓகத்து இறுதியிலுள்ளவாறு 1,418 கிளைகள் மற்றும் 638 அலுவலகங்களுடன்[1] 43 உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளும்[2] 4 சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளும் தொழிற்பட்டு வருகின்றன.

- **2019இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் இத்துறையினது சொத்துக்களின் வளர்ச்சி 2018இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மோசமடைந்தது.** துறையின் மொத்தச் சொத்துக்கள் 2018ஆம் ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ.1,442.4 பில்லியனுக்கு 0.8 சதவீதத்தினால் மாத்திரம் (ரூ.11 பில்லியன்) வளர்ச்சியடைந்தது. சொத்துக்கள் வீழ்ச்சியடைய முக்கிய காரணம் எதிர்மறையான கொடுகடன் வளர்ச்சியாகும். இது, திரவச்சொத்துக்கள் மற்றும் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் உள்ளிட்ட ஏனைய சொத்துக்களின் வளர்ச்சியையும் குறைத்துக்காட்டியது.

- **இக்காலப்பகுதியில் கொடுகடன் வளர்ச்சி குறைவடைந்தமைக்கு பொருளாதாரம் மெதுவடைந்தமை, முதலீட்டாளர் மனோபாவம் பாதிக்கப்பட்டமை மற்றும் பொருளாதாரத்தில் நிலவிய உயர்ந்தளவிலான உண்மை வட்டி வீதங்கள் என்பன முக்கிய காரணங்களாகக் காணப்பட்டன.** 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 6.4 சதவீதம் கொண்ட கொடுகடன் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் கொடுகடன் வளர்ச்சி 1.9 சதவீதம் கொண்டதொரு எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தது.


- **தொடர்புடைய காலப்பகுதியில் துறையின் சொத்துக்களின் தரம் வீழ்ச்சியடைந்திருந்தது.** மொத்த செயற்படாக் கடன்களின் விகிதம் 2018 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 7.7 சதவீதத்திலிருந்து 9.6 சதவீதத்திற்கு அதிகரித்து, பொருளாதார நடவடிக்கைகள் மெதுவடைந்தமையின் முக்கிய காரணமாக சொத்துக்களின் தரம் மோசமடைந்தமைக்கான அறிகுறிகளைக் காட்டியது. எவ்வாறாயினும், ஏற்பாட்டு உள்ளடக்க விகிதம், 2018 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட மட்டமான 57.0 சதவீதத்திலிருந்து 58.0 சதவீதத்திற்கு மெதுவாக அதிகரித்தது. கடன் இழப்புக்களுக்கான உயர்ந்த ஏற்பாடுகள் மற்றும் உயர்ந்த ஏற்பாட்டு உள்ளடக்க வீதம் என்பனவற்றின் காரணமாக தேறிய செயற்படாக் கடன் விகிதம் 3.1 சதவீதம் கொண்ட சமாளிக்கத்தக்கதொரு

1 ஏனைய அலுவலகங்கள் என்பதன் பொருள் பொதுமக்களின் வைப்புக்களைத் திரட்டாத பணி நிலையங்கள், அடகு நிலையங்கள், சேகரிப்பு நிலையங்கள் என்பனவற்றினைக் குறிக்கும்.

2 ரி.கே.எஸ் பினான்ஸ் லிமிடெட்டின் உரிமம் 2019.09.19 அன்று இரத்துச் செய்யப்பட்டது.

வரைபடம் 8.9


**உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனித் துறையின் செயற்படாக் கடன்கள்**




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

வரைபடம் 8.10

**உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் மொத்த வைப்புக்கள் மற்றும் கடன்பாடுகள்**




*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

மட்டத்தில் காணப்பட்டது. குழப்பமான அரசியல் சூழ்நிலை மற்றும் மெதுவடைந்த பொருளாதாரம் என்பனவற்றின் காரணமாக செயற்படாக் கடன்கள் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- **துறையின் விரிவாக்கமானது வைப்புக்களினூடாக பெருமளவு நிதியிடப்பட்டது.** வைப்புக்கள், 53.0 சதவீதத்துடன் நிதியிடல் கலப்பில் முனைப்புப் பெற்றுக் காணப்பட்டதுடன் 2018 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 50.1 சதவீதம் கொண்ட பங்குடன் ஒப்பிடுகையில் இது அதிகரித்திருக்கிறது. 2019இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் வைப்புக்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 4.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.7 சதவீதம் (ரூ.48 பில்லியன்) கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. துறையின் கடன்பெறுகைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 11.3 சதவீதம் (ரூ.45 பில்லியன்) கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12.3 சதவீதம் கொண்ட (ரூ.57 பில்லியன்) எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

- **உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் ஒட்டுமொத்த திரவத்தன்மை நிலைமையானது மிகையொன்றினைப் பதிவுசெய்தது.** 2019 ஓகத்து இறுதியில் துறையில் கிடைக்கத்தக்கதாயிருக்கும் ஒட்டுமொத்த நியதி திரவத்தன்மை சொத்துக்கள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச தேவைப்பாடான ரூ.91.7 பில்லியனுக்கெதிராக ரூ.35.8 பில்லியன் கொண்ட மிகையொன்றினைக் காட்டியது. திரவத்தன்மை

அட்டவணை 8.2

**உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்**

| விடயம் | 2017 ஓகத் முடிவில் | 2018 ஓகத் முடிவில்(அ) | 2018 திசெ முடிவில் | 2019 ஓகத் முடிவில்(ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2018 ஓகத் | 2019 ஓகத்(ஆ) |
| மொத்தச் சொத்துக்கள் - திரண்ட (ரூ.பில்லியன்) | 1,363.7 | 1,469.6 | 1,503.5 | 1,531.2 | 7.8 | 4.2 |
| மொத்தச் சொத்துக்கள் - தேறிய (ரூ.பில்லியன்) | 1,306.8 | 1,406.4 | 1,431.3 | 1,442.4 | 7.6 | 2.6 |
| கடன்களும் முற்பணங்களும் - திரண்ட (ரூ.பில்லியன்) | 1,067.0 | 1,184.6 | 1,205.0 | 1,200.3 | 11.0 | 1.3 |
| கடன்களும் முற்பணங்களும் - தேறிய (ரூ.பில்லியன்) | 1,020.2 | 1,125.1 | 1,137.0 | 1,115.2 | 10.3 | -0.9 |
| வைப்புக்கள் (ரூ.பில்லியன்) | 635.6 | 718.0 | 716.8 | 764.6 | 13.0 | 6.5 |
| கடன்பெறுகைகள் (ரூ.பில்லியன்) | 413.2 | 440.7 | 463.8 | 406.9 | 6.6 | -7.7 |
| மூலதன நிதிகள் (ரூ.பில்லியன்) | 164.1 | 184.1 | 181.6 | 204.8 | 12.2 | 11.2 |
| அடுக்கு 1 மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | 12.6 | 9.8 | 9.8 | 11.2 | | |
| மொத்த மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | 13.3 | 11.1 | 11.1 | 12.6 | | |
| திரண்ட செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 5.5 | 6.9 | 7.7 | 9.6 | | |
| தேறிய செயற்படாக் கடன்கள் விகிதம் (%) | 1.3 | 2.2 | 2.4 | 3.1 | | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்) (%) ஆண்டுக்கு | 3.0 | 2.8 | 2.7 | 1.6 | | |
| பங்கு மூலதனம் மீதான வருவாய் (வரிக்குப் பின்) (%) ஆண்டுக்கு | 14.9 | 12.9 | 11.4 | 4.3 | | |
| மொத்தச் சொத்துக்களுக்கான திரவச்சொத்துக்கள் (%) | 8.5 | 7.5 | 7.5 | 8.3 | | |


(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

8

வரைபடம் 8.11


உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனித் துறையின் மொத்தத் திரவச் சொத்துக்கள் மற்றும் திரவத்தன்மை விகிதம்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 8.12

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனித் துறையின் மூலதன நிலைமை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


விகிதம் (வைப்புக்கள் மற்றும் கடன்பெறுகைகள் மீதான திரவச் சொத்துக்கள்) 2018 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 9.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 10.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு கிடைக்கத்தக்க திரவச் சொத்துக்கள் 12.3 சதவீதத்தினால் அதிகரித்தமையே காரணமாகும்.

- **ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மூலதன தேவைப்பாடுகள் உயர்வடைந்தமையின் காரணமாக இத்துறையின் மூலதன மட்டம் மேம்பட்டது.** 2019 ஓகத்தில் மொத்த ஒழுங்குமுறைப்படுத்திய மூலதன மட்டமானது 2018 திசெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.159.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.20.7 பில்லியனால் அதிகரித்தது. துறையின் மூலதனமும் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதமும் 2018 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட மட்டமான 9.8 சதவீதம் மற்றும் 11.1 சதவீதத்திலுமிருந்து 2019 ஓகத்து இறுதியில் முறையே 11.2 சதவீதத்திற்கும் 12.6 சதவீதத்திற்கும் அதிகரித்தன. எவ்வாறாயினும், இடர்ப்பாட்டிலுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் உட்பட ஒரு சில உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகவில்லை.

- **செயற்படாக் கடன்கள் உயர்வடைந்ததன் முக்கிய காரணமாக இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்தது.** உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையினது இலாபங்கள் 2018இன் தொடர்புடைய காலப்பகுதியின் ரூ.15.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் ரூ.9.8 பில்லியனாகக் காணப்பட்டன. இக்காலப்பகுதியில் துறையின் இலாபங்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைவடைந்த தேறிய வட்டி வருமானமும் அதிகரித்த தொழிற்பாட்டு செலவுகளுமே காரணங்களாகும். வட்டிச் செலவுகள் 5.2 சதவீதத்தினால் (ரூ.3 பில்லியன்) அதிகரித்த அதேவேளையில் வட்டி வருமானம் 0.5 சதவீதத்தினால் மாத்திரம் (ரூ.0.6 பில்லியன்) அதிகரித்தமையின் காரணமாக தேறிய வட்டி வருமானம் குறைவடைந்தது. சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் விகிதம் என்பன 2018இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட முறையே 2.8 சதவீதம் மற்றும் 12.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 ஓகத்தில் முடிவடைந்த எட்டு மாதகாலப்பகுதியில் முறையே 1.6 சதவீமாகவும் 4.3 சதவீதமாகவும் காணப்பட்டன.

வரைபடம் 8.13

உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனித் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனம் மீதான வருவாய்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

- **வைப்புக்கள், கடன்வழங்கல்கள் மற்றும் கடன்பெறுகைகள் என்பன தொடர்பில் பலயீனமான உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை உட்பட பல ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.** இடர்ப்பாட்டிலுள்ள ஒரு கம்பனியினது வியாபார விடயங்களை முகாமைப்படுத்துவதற்காக மத்திய வங்கி, முகாமைத்துவக் குழுவொன்றினை நியமித்துள்ளது. மத்திய வங்கி மற்றொரு இடர்ப்பாட்டிலுள்ள கம்பனியினது துணைக் கம்பனிகளினதும் மற்றும் இடர்ப்பாட்டிலுள்ள கம்பனியின் முதலீட்டுச் சொத்துக்களையும் விற்பனை செய்தமையினூடாக அவற்றின் வைப்புக்களின் ஒரு பகுதியை மீளச்செலுத்துவதற்கு வசதியளித்தது. மேலுமொரு இடர்ப்பாட்டிலுள்ள கம்பனியின் வைப்புக்களினது ஒரு பகுதியானது கம்பனியினால் உருவாக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி மீளச் செலுத்தப்பட்டது.

### முதனிலை வணிகர் கம்பனிகள்

- **2019இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்களும் மொத்தச் சொத்துப்பட்டியலும் வீழ்ச்சியடைந்தன.** ஆண்டின் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகள் தொழில்துறையின் மொத்தச் சொத்துக்கள் ரூ.79.8 மில்லியனுக்கு 4.5 சதவீத்தினாலும் முதனிலை வணிகர் கம்பனிகள் வசமிருந்த அரச பிணையங்களின் மொத்தச் சொத்துப்பட்டியல் ரூ.73.7 பில்லியனுக்கு 4.0 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சிக்கு முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணியாகும். 2019 ஓகத்து இறுதியில் மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழான கடன்பெறுகைகளும் 2018 ஓகத்து இறுதியில் காணப்பட்ட அத்தகைய கடன்பெறுகைகளுடன் ஒப்பிடுகையில் 7.1 சதவீதத்தினால் ரூ.63.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.

- **2019 முதல் எட்டு மாதகாலப்பகுதியில், சொத்துக்களின் மீதான வருவாய், பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாய் ஆகிய நியதிகளில் அளவிடப்பட்ட முதனிலை வணிகர் கம்பனிகளின் இலாபத்தன்மை முறையே 6.9 சதவீதமாகவும் 33.1 சதவீதமாகவும் காணப்பட்டன.** ஒட்டுமொத்தமாக, 2019 ஓகத்தில் முடிவடைந்த எட்டு மாதகாலப்பகுதிக்கான முதனிலை வணிகர்களின் இலாபம் 2018இன் இதேகாலப்பகுதிக்கான இலாபமான ரூ.1.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.3.7 பில்லியனாகக் காணப்பட்டது. 2019இன் ஓகத்துடன் முடிவடைந்த எட்டு மாதகாலப்பகுதிக்கு முதனிலை வணிகர் கம்பனிகள் ரூ.3.1 பில்லியன் கொண்ட மொத்த இலாபத்தினைப் (தேறல் செய்யப்பட்ட மற்றும் தேறல் செய்யப்படாத) பதிவுசெய்தன. இது, 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.0.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பாகும். விளைவு வளையியின் கீழ் நோக்கிய போக்கு 2019இன் முதல் எட்டு மாதகாலப்பகுதியில் முதனிலை வணிகர் கம்பனிகளின் இலாபத்தன்மையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை ஏற்படுத்தியது.

- **அனைத்து முதனிலை வணிகர் கம்பனிகளும் 2019 ஓகத்து இறுதியில் குறைந்தபட்ச தேவைப்பாடான ரூ.1,000 மில்லியனுக்கு மேலாக தமது மைய மூலதனத்தினைப் பேணிக்கொண்டன.** முதனிலை வணிகர் கம்பனிகளினது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட

அட்டவணை 8.3

முதனிலை வணிகர் கம்பனிகள் - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2017 ஓகத் முடிவில் | 2018 ஓகத் முடிவில் | 2018 திசெ முடிவில் | 2019 ஓகத் முடிவில்(அ)(ஆ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2018 ஓகத் | 2019 ஓகத்(அ)(ஆ) |
| **மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்)** | **67.6** | **73.9** | **83.6** | **79.8** | **9.2** | **8.0** |
| மொத்தச் சொத்துப்பட்டியல் (ரூ.பில்லியன்) | 50.6 | 67.3 | 76.7 | 73.7 | 33.0 | 9.4 |
| மொத்த மூலதனம் (ரூ.பில்லியன்) | 22.7 | 11.9 | 11.5 | 14.4 | -47.4 | 20.6 |
| **வரிக்கு முன்னரான இலாபம் (ரூ.பில்லியன்)** | **2.4** | **1.3** | **-0.01** | **3.7** | **-43.5** | **180.2** |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | 58.8 | 22.3 | 21.3 | 23.0 | -36.4 | 0.7 |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) | 4.8 | 2.8 | -0.02 | 6.9 | -2.0 | 4.1 |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%) | 14.2 | 13.9 | 2.0 | 33.1 | -0.3 | 19.2 |
| **முடிக்கித் தவணைகள்** | **1.9** | **5.1** | **6.0** | **4.4** | **165.4** | **-12.5** |
| மொத்த வருமானத்திற்கான தொழிற்பாட்டுச் செலவுகள் (%) | 12.1 | 11.6 | 12.8 | 7.0 | -0.5 | - 4.6 |
| மொத்த வருமானத்திற்கான மொத்தச் செலவு (%) | 24.0 | 31.8 | 103.0 | 13.4 | 7.8 | -18.3 |
| **சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கால அளவு (ஆண்டுகள்)** | 2.4 | 2.5 | 2.4 | 2.5 | 3.9 | 2.7 |

(அ) தற்காலிகமானது

குறுப்பு: 1. என்றஸ்ட் செக்குறிட்டிஸ் பிஎல்சியின் நிதித் தரவுகள் நீங்கலாக

2. 2018 மற்றும் 2019ஆம் ஆண்டிற்கான பெர்பெட்சுவல் ட்ரெஷரீஸ் லிமிட்டெட்டின் நிதித் தரவுகள் நீங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

மூலதன போதுமை விகிதம், 10.0 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்திற்கு மேலாக காணப்பட்டதுடன் இவ்விகிதமானது 2018 ஓகத்து இறுதியின் 21.3 சதவீதத்திலிருந்து 2019 ஓகத்து இறுதியில் 23.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

- **முதனிலை வணிகர் கம்பனிகளின் இடர்நேர்வுத் தோற்றப்பாடு மேம்பட்டது.** மொத்தச் சொத்துப்பட்டியலில் வர்த்தகச் சொத்துப்பட்டியலின் அளவானது 2018 ஓகத்து இறுதியின் 77.7 சதவீதத்திலிருந்து 2019 ஓகத்து இறுதியில் 79.0 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தமையின் காரணமாக 2019 முதல் எட்டு மாதகாலப்பகுதியில் சந்தை இடர்நேர்விற்கு இத்தொழில்துறை உள்ளாகும் தன்மையானது தொடர்ந்தும் உறுதியானதாகப் பேணப்பட்டது. முதனிலை வணிகர் கம்பனிகள் இடர்நேர்வற்ற அரச பிணையங்களின் பாரிய விகிதத்தினை தம்வசம் வைத்திருக்கின்றமையினைக் கருத்திற்கொள்கையில் எதிர்பாராத திரவத்தன்மை இடைவெளிகளுக்கு நிதியிடுவதற்கு நிதிகளைப் பெறுவதற்கான பாதுகாப்புப் பிணையமாக அத்தகைய அரச பிணையங்களைப் பயன்படுத்துவதற்கு முதனிலை வணிகர் கம்பனிகள் இயலக்கூடியனவாக இருந்தமையினால் முதனிலை வணிகர் கம்பனிகளின் திரவத்தன்மை இடர்நேர்வு குறைவானதாகக் காணப்பட்டது. மேலும், பெரும்பாலான முதனிலை வணிகர் கம்பனிகள் தேவைப்படுமிடத்து திரவத்தன்மை இடைவெளிகளை நிரப்புவதற்கு துணைநில் எதிர்பாராத நிதியிடல் ஏற்பாடுகளைக் கொண்டிருந்தனர்.

### காப்புறுதித் துறை

- **மொத்தச் சொத்துக்களில் ஆரோக்கியமானதொரு வளர்ச்சியைக் காட்டியவாறு காப்புறுதித் துறையின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகையானது முன்னேற்றமடைந்தது.** காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களானது 2018இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்த 9.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019 யூன் மாத இறுதியில் 12.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மொத்த எழுதப்பட்ட காப்பீட்டின் வளர்ச்சியானது 2019 யூன் இறுதியில் 9.2 சதவீதமாகக் காணப்பட்டு ஒரு வீழ்ச்சியை வெளிப்படுத்தியது. 2018 யூன் இறுதியில் காணப்பட்ட 12.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 யூன் மாத இறுதியில் பொதுக் காப்புறுதித் துறையினது மொத்த எழுதப்பட்ட காப்பீடானது 8.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த அதேவேளை நீண்ட காலக் காப்புறுதித் துறையின் வளர்ச்சியானது 9.9 சதவீதமாகக் காணப்பட்டது. பொதுக் காப்புறுதியின் உப பிரிவுகளில் சுகாதாரக் காப்புறுதியின்

அட்டவணை 8.4

காப்புறுதித் துறை - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2017 யூன் முடிவில் | 2018 யூன் முடிவில் | 2018 திசெ முடிவில் | 2019 யூன் முடிவில்(அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2018 யூன் | 2019 யூன்(அ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | **533.1** | **581.8** | **606.6** | **654.0** | **9.1** | **12.4** |
| மொத்த வருமானம் (ரூ.பில்லியன்)(ஆ) | **96.6** | **108.1** | **221.2** | **119.0** | **11.8** | **10.2** |
| திரண்ட எழுதப்பட்ட தவணைக் கட்டண வருமானம் (ரூ.பில்லியன்)(ஆ) | 76.2 | 85.8 | 176.2 | 93.6 | 12.6 | 9.2 |
| முதலீட்டு வருமானம் (ரூ.பில்லியன்)(ஆ) | 20.5 | 22.3 | 45.0 | 25.4 | 8.9 | 13.8 |
| வரிக்கு முன்னரான இலாபம் (ரூ.பில்லியன்)(ஆ) | **4.7** | **21.7** | **29.5** | **12.5** | **364.7** | **-42.4** |
| மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 358.0 | 310.3 | 312.0 | 293.0 | | |
| பொதுக் காப்புறுதி | 117.0 | 179.5 | 204.0 | 193.0 | | |
| பிடித்துவைத்தல் விகிதம் (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 95.9 | 96.0 | 95.8 | 96.1 | | |
| பொதுக் காப்புறுதி | 78.5 | 76.1 | 77.9 | 75.7 | | |
| கோரல் விகிதம் (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 36.9 | 44.2 | 46.2 | 47.5 | | |
| பொதுக் காப்புறுதி | 63.9 | 63.7 | 63.7 | 63.2 | | |
| இணைந்த தொழிற்பாட்டு விகிதம் (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 86.2 | 98.0 | 101.0 | 98.4 | | |
| பொதுக் காப்புறுதி | 102.9 | 101.4 | 102.9 | 103.5 | | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (%) | | | | | | |
| நீண்டகாலக் காப்புறுதி | 1.8 | 8.5 | 4.9 | 10.8 | | |
| பொதுக் காப்புறுதி | 8.9 | 5.1 | 5.4 | 4.6 | | |
| **பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (%) - பொதுக் காப்புறுதி** | **18.8** | **10.4** | **11.2** | **9.6** | | |
| **ஒப்புறுதி விகிதம் (%) - பொதுக் காப்புறுதி** | **17.1** | **18.0** | **18.1** | **17.8** | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) காலப்பகுதியில்

*மூலம்:* இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

8

அட்டவணை 8.5

கூறு நம்பிக்கைத் துறை - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2017 யூன் முடிவில் | 2018 யூன் முடிவில் | 2018 திசெ முடிவில் | 2019 யூன் முடிவில்(அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2018 யூன் | 2019 யூன்(அ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 104.3 | 64.8 | 64.3 | 75.5 | -37.9 | 16.5 |
| தேறிய சொத்துப் பெறுமதி - (ரூ.பில்லியன்) | 103.3 | 64.6 | 64.2 | 75.2 | -37.4 | 16.4 |
| முதலீடுகள் (ரூ.பில்லியன்) | 102.3 | 64.8 | 64.3 | 75.3 | -36.7 | 16.3 |
| பங்குரிமை மூலதனம் | 14.4 | 11.1 | 9.5 | 8.0 | -22.8 | -27.4 |
| அரச பிணையங்கள் | 42.8 | 5.3 | 2.5 | 4.0 | -87.6 | -24.4 |
| ஏனையவை (உ.ம்: வர்த்தகப் பத்திரம், கடன்தொகுதிகள், நம்பிக்கைச் சான்றிதழ்கள் மற்றும் வங்கி வைப்புக்கள்) | 45.2 | 48.4 | 52.4 | 63.3 | 7.1 | 30.8 |
| தேறிய சொத்துப் பெறுமதியின் % ஆக பங்குரிமை மூலதனத்தில் முதலீடுகள் | 13.9 | 17.2 | 14.7 | 10.7 | | |
| தேறிய சொத்துப் பெறுமதியின் % ஆக அரச பிணையங்களில் முதலீடுகள் | 41.0 | 8.2 | 3.8 | 5.3 | | |
| தேறிய சொத்துப் பெறுமதியின் % ஆக ஏனைய முதலீடுகள் | 43.8 | 74.9 | 81.5 | 84.1 | | |
| கூறு வைத்திருப்போரின் மொத்த எண்ணிக்கை | 40,651 | 41,200 | 42,093 | 44,224 | | |
| வழங்கலிலுள்ள கூறுகளின் எண்ணிக்கை (பில்லியன்) | 6.7 | 2.0 | 3.4 | 3.6 | | |
| நம்பிக்கை கூறுகளின் எண்ணிக்கை | 76 | 79 | 75 | 75 | | |

(அ) தற்காலிகமானது

*மூலங்கள்:* பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு
இலங்கை நம்பிக்கை கூறுகளின் சங்கம்

மொத்த எழுதப்பட்ட காப்பீட்டின் வளர்ச்சியானது 31.2 சதவீதமான உயர் வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் அதனைத்தொடர்ந்து தீ அபாயக் காப்புறுதி 28.3 சதவீதத்தாலும், கடலபாயக் காப்புறுதி 4.5 சதவீதத்தாலும் வாகனக் காப்புறுதி 3.1 சதவீதத்தாலும் அதிகரித்தது. 2018ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது மோட்டார் வாகனக் காப்புறுதியின் வளர்ச்சியானது குறைவடைந்து செல்கையில் சுகாதார மற்றும் கடலபாயக் காப்புறுதிகளின் மொத்த எழுதப்பட்ட காப்பீடானது உயர்ந்த வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

- **குறித்த காலப்பகுதியில் காப்புறுதித் துறையின் இலாபம் வீழ்ச்சியடைந்தது.** 2018 யூன் மாதத்துடன் ஒப்பிடும் போது 2019 யூன் இறுதியில், பிரதானமாக அடித்தள விளைவின் காரணங்களினால் குறித்த துறையின் மொத்த இலாபமானது 42.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. நீண்டகாலக் காப்புறுதித் துறையானது 51.6 சதவீதத்தால் கூர்மையாக வீழ்ச்சியடைந்த அதேவேளை, பொதுக் காப்புறுதித் துறையினது இலாபம் 5.4 சதவீதத்தினால் மட்டுமே வீழ்ச்சியடைந்தது. இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நியதிகளுடன் இணங்கி ஒழுகுவதற்காக 2018ஆம் ஆண்டில் இரண்டு காப்புறுதிக் கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மேலதிகமான மாற்றல் மூலம் நீண்ட கால காப்புறுதித் துறையின் இலாபமானது குறித்த ஆண்டில் வழமைக்கு மாறாக அதிகமாகக் காணப்பட்டது. காப்புறுதித் துறையின் ஒட்டுமொத்த இலாபத்திற்கு நீண்ட காலக் காப்புறுதித் துறையின் பங்களிப்பானது 67.1 சதவீதமாகக் காணப்பட்டது.

## கூறு நம்பிக்கைத் துறை

- **கவனத்தில் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் கூறுநம்பிக்கைத்துறையின் செயலாற்றம் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை வெளிக்காட்டியது.** 2019 யூன் இறுதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் கூறுநம்பிக்கைகள் 4ஆல் குறைவடைந்த போதிலும் 2018 யூன் இறுதியில் காணப்பட்ட கூறுநம்பிக்கை உடைமையாளர்களின் மொத்த எண்ணிக்கையான 41,200 இலிருந்து 2019 யூன் இறுதிக்கு 44,224ஆக அதிகரித்தது. கடந்த ஆண்டு ஓர் வீழ்ச்சியைப் பதிவு செய்திருந்த தேறிய சொத்துப் பெறுமதியானது 16.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

அட்டவணை 8.6

பங்குத் தரகுக் கம்பனிகள் துறை - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2017 யூன் முடிவில் | 2018 யூன் முடிவில் | 2018 திசெ முடிவில் | 2019 யூன் முடிவில்(அ) | ஆண்டுக்காண்டு மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2018 யூன் | 2019 யூன்(அ) |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 12.8 | 10.5 | 8.7 | 7.5 | (18.4) | (27.9) |
| மொத்தப் பொறுப்புக்கள் (ரூ.பில்லியன்) | 7.3 | 5.0 | 3.3 | 2.5 | (31.7) | (49.5) |
| தேறிய மூலதனம் (ரூ.பில்லியன்) | 5.6 | 5.5 | 5.3 | 5.0 | (1.0) | (8.4) |
| வருவாய் (ரூ.பில்லியன்)(ஆ) | 447.2 | 384.6 | 502.0 | 239.6 | (14.0) | (37.7) |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம் / (நட்டம்) (ரூ.மில்லியன்)(ஆ) | 35.3 | (57.9) | 1.9 | (184.1) | (263.8) | (218.2) |

(அ) தற்காலிகமானது
(ஆ) காலப்பகுதியில்

*மூலம்:* பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு

8

அட்டவணை 8.7
ஓய்வூதிய நிதியங்கள் - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | ஊழியர் சேமலாப நிதியம் | | | ஊழியர் நம்பிக்கை நிதியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 யூன் முடிவில் | 2019 யூன் முடிவில்(அ) | மாற்றம் (%) | 2018 யூன் முடிவில் | 2019 யூன் முடிவில்(அ) | மாற்றம் (%) |
| மொத்தப் பங்களிப்புக்கள் (ரூ.பில்லியன்) | 71.0 | 78.3 | 10.3 | 12.3 | 13.4 | 8.9 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.பில்லியன்) (ஆ) | 50.4 | 64.0 | 27.0 | 9.4 | 10.2 | 8.7 |
| மொத்தச் சொத்துக்கள் (ரூ.பில்லியன்) | 2,191 | 2,428 | 10.8 | 295.0 | 327.7 | 11.1 |
| மொத்த முதலீடுகளின் சொத்துப்பட்டியல் (ரூ.பில்லியன்) | 2,111 | 2,425 | 14.9 | 277.9 | 308.3 | 10.9 |
| இதில், அரச பிணையங்கள் (%) | 91.6 | 94.0 | 2.4 | 75.0 | 77.8 | 3.7 |
| திரண்ட வருவாய் (ரூ.பில்லியன்) (ஆ) | 112.2 | 115.3 | 2.8 | 14.5 | 15.9 | 9.9 |

(அ) தற்காலிகமானது
(ஆ) காலப்பகுதியில்

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை

கருத்தில் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் பங்குச் சந்தை மற்றும் அரச பிணையங்கள் மீதான முதலீடு 27.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த அதேவேளையில் ஏனைய பிணையங்கள் மீதான முதலீடு 30.8 சதவீதத்தால் அதிகரித்தது.

### பங்குத்தரகர் கம்பனிகள் துறை

- **பங்குத் தரகர் கம்பனிகள் துறையானது பங்குச் சந்தையின் பிரகாசமற்ற செயற்பாட்டிற்கேற்ப மொத்தச் செயலாற்றத்தில் ஓர் வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.** கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சராசரி நாளாந்தப் புரள்வின் வீழ்ச்சி காரணமாக, 2019 யூன் இறுதியில் பங்குத்தரகர்களின் வருமானம் குறிப்பிடத்தக்களவில் 37.7 சதவீதத்தால் ரூ.239.6 மில்லியனுக்கு குறைவடைந்தது. வருமான இழப்பினைத் தொடர்ந்து பங்குத் தரகர் துறையின் நட்ட நிலைமையானது 2018 யூன் இறுதியின் ரூ.57.9 மில்லியனிலிருந்து 2019 யூன் இறுதியில் ரூ.184.1 மில்லியனாக பாதகநிலைமையொன்றினைப் பதிவுசெய்துள்ளது. தொடர்பான காலப்பகுதியில் துறையின் தேறிய மூலதன மட்டம் 8.4 சதவீதத்தால் குறைவடைந்தது.

### ஓய்வூகால நிதியங்கள்

- **2019 யூன் இறுதியில் ரூ.2.4 ரில்லியனுக்கு மேற்பட்ட ஒரு சொத்துத் தளத்துடன் இலங்கையின் மிகப்பெரிய ஓய்வுகால நிதியமாக ஊழியர் சேமலாப நிதியம் விளங்குகிறது.** 2018 திசெம்பர் இறுதியில் ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 18.7 மில்லியனை அடைந்து, முன்னைய ஆண்டினைவிட 3.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.

- **2019இன் முதல் ஆறு மாத காலப்பகுதியில் மொத்த உறுப்பினர்களின் பெறப்பட்ட பங்களிப்பானது 10.3 சதவீதத்தினால் ரூ.78.3 பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளையில் மீளளிப்புக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 27.0 சதவீதத்தினால் ரூ.64.0 பில்லியனுக்கு அதிகரித்தன.** அதன்படி, தேறிய பங்களிப்பு (மீளளிப்புக்களைக் கழித்த பங்களிப்பு) குறித்த காலப்பகுதியில் ரூ.14.3 பில்லியனாகக் காணப்பட்டது.

- **2019 யூன் 30இல் முடிவடைந்த 12 மாதங்களில் ஊழியர் சேமலாப நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ.2,428 பில்லியனுக்கு 10.8 சதவீதத்தினால் அதிகரித்த அதேநேரம் ஊழியர் சேமலாப நிதியத்தின் மொத்த முதலீடுகள் ரூ.2,425 பில்லியனுக்கு 14.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** ஊழியர் சேமலாப நிதியத்தின் முதலீடு அரச பிணையங்களில் 94.0 சதவீதத்தினையும் பங்குரிமைச் சந்தையில் 2.6 சதவீதத்தினையும் மற்றும் கம்பனிப் படுகடன்கள் நம்பிக்கைச் சான்றிதழ்கள் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளில் 2.5 சதவீதத்தினையும் மற்றும் நிலையான வைப்புக்களில் 0.9 சதவீதத்தினையும் கொண்டுள்ளது. நிதியமானது 2019இல் முதலரைப்பகுதியில் திரண்ட முதலீட்டு வருமானமாக ரூ.115.0 பில்லியனை மதிப்பிட்டுள்ளதோடு, 2018இல் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 2.8 சதவீத அதிகரிப்பொன்றினைக் காட்டுகின்றது.

- **2019இல் சொத்துக்கள் மற்றும் தேறிய பங்களிப்புக்கள் ஆகிய இரண்டினதும் அடிப்படையில் தொழிலாளர் நம்பிக்கை நிதியமானது விரிவாக்கப்பட்டது.** மொத்த சொத்துக்களானது, 2018 யூன் மாத இறுதியுடன் ஒப்பிடுகையில் 2019 யூன் மாத இறுதியில் 11.1 சதவீதத்தால் அதிகரித்து, ரூ.327.7 பில்லியனாகக்

காணப்பட்டது. குறித்த தொடர்பான காலப்பகுதியில், ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தேறிய பங்களிப்பானது 10.3 சதவீதத்தால் அதிகரித்து ரூ.3.2 பில்லியனை அடைந்தது. ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலானது அரச பிணையங்களில் கூடுதலான கவனத்தைச் செலுத்தியதுடன், அது 2019 யூன் மாத இறுதியில் மொத்தச் சொத்துப்பட்டியல்களின் 77.8 சதவீதமாகக் காணப்பட்டது. அவ்வாறே, மொத்த முதலீட்டில் பங்குரிமை மற்றும் கம்பனி படுகடன் பிணையங்கள் மீதான முதலீடானது முறையே 3.5 சதவீதம் மற்றும் 1.1 சதவீதமாகக் காணப்பட்டது.

- **பொதுப் பணிகள் சேமலாப நிதியமானது 2019 யூன் மாத இறுதியில் உறுப்பினர் எண்ணிக்கையிலும் தேறிய பங்களிப்பிலும் விரிவாக்கத்தினை வெளிக்காட்டிய அதேவேளையில் சொத்துக்களின் நியதியில் சுருக்கமடைந்தது.** 2018 யூன் மாத இறுதியில் காணப்பட்ட செயற்படு உறுப்பினர்கள் எண்ணிக்கையான 228,700 உடன் ஒப்பிடுகையில் 2019 யூன் மாத முடிவில் 230,414ஆக அதிகரித்தது. 2019இல் பொதுப் பணிகள் சேமலாப நிதியத்தின் முதலீடுகள் 6.2 சதவீதத்தால் குறைவடைந்து ரூ.58.8 பில்லியனாகக் காணப்பட்ட வேளையில் மொத்தச் சொத்துக்களானது 2.4 சதவீதத்தால் குறைவடைந்து ரூ.62.7 பில்லியனாகக் காணப்பட்டது. எனினும், தேறிய பங்களிப்பானது 2018 யூன் மாத இறுதியில் காணப்பட்ட ரூ.50.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 யூன் மாத முடிவில் ரூ.240.3 மில்லியனாக அதிகரித்தது. மொத்த முதலீடுகளில் அரச பிணையங்களின் மீதான முதலீடானது 44.0 சதவீதமாகக் காணப்பட்டது. 2019 முதல் அரையாண்டில் அங்கத்தவர் மீதிகளிலான வருவாய் வீதமானது 12.6 சதவீதமாகக் காணப்பட்டது.

- **2018 யூன் மாத இறுதியில் 127ஆகக் காணப்பட்ட அனுமதியளிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதியங்களின் எண்ணிக்கையானது அத்தகைய நிதிகளுடன் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் மூடப்பட்டதன் காரணமாக 2019 யூன் மாத இறுதியில் 123ஆக வீழ்ச்சியடைந்தது.** இதன்படி, 2018 யூன் மாத இறுதியில் 169,201ஆகப் பதிவான அனுமதியளிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதிய அங்கத்தவர்களின் எண்ணிக்கையானது 134,465ஆக வீழ்ச்சியடைந்தது. 2018 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2019 யூன் மாத இறுதியில் அனுமதியளிக்கப்பட்ட தனியார் சேமலாப நிதியத்தின் மொத்தச் சொத்துக்களானது 2.9 சதவீதத்தால் குறைவடைந்து ரூ.174.5 பில்லியனாகக் காணப்பட்டது.


## நிதியியல் சந்தைகளின் அபிவிருத்திகள்

### உள்நாட்டுப் பணச் சந்தை

- **ஆண்டின் முதல் மூன்று மாத காலப்பகுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமானது துணைநில் வீத வீச்சின் மேல் எல்லைக்கு அண்மையாகக் காணப்பட்டதுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை துணைநில் வீத வீச்சின் நடு வீதத்தினை நோக்கி நகர்த்துவதனை இலக்காகக் கொண்ட தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கூடான நாணயக் கொள்கைத் தளர்த்தல்களினைத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது.** 2018இன் பிற்பகுதியிலும் 2019இன் தொடக்கத்திலும் வெளிநாட்டுத் துறையினைக் கரிசனையில் கொண்டு சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமானது துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையில் பேணப்பட்டது. 2019 மாச்சு 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் 6.00 சதவீதத்திலிருந்து 5.00 சதவீதத்திற்கு நூறு அடிப்படைப் புள்ளிகளினால் கீழ் நோக்கித் திருத்தப்பட்டமையினைத் தொடர்ந்து உள்நாட்டுப் பணச் சந்தைக்கு ஏறத்தாழ ரூ.60 பில்லியன் கொண்ட திரவத்தன்மை விடுவிக்கப்பட்ட போதும், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமானது துணைநில் வீத வீச்சின் மேல் எல்லையிலேயே பேணப்பட்டது. வெளிநாட்டுத் துறைச் சூழல் மேம்பட்டமையின் காரணமாக, 2019 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து சாதகமாகக் காணப்பட்ட பணச் சந்தையின் திரவத்தன்மை நிலைமைகளின் உதவியுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் துணைநில் வீச்சின் நடுப்பகுதியை நோக்கி நகர அனுமதிக்கப்பட்டது. 2019 மேயில் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.50 சதவீதத்திற்கும் 8.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டமையினைத் தொடர்ந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமானது துணைநில் வீத வீச்சின் மையப்பகுதிக்குக் கீழே வீழ்ச்சியடைந்தது. பணச் சந்தையில் மிகையான திரவத்தன்மை காணப்பட்ட போதும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடையேயும் அழைப்புப் பணச் சந்தையில் மட்டுப்படுத்தப்பட்டளவில் பங்கேற்கும் வெளிநாட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடையேயும் காணப்பட்ட சீரற்ற திரவத்தன்மை விநியோகங்கள் காரணமாக 2019 ஓகத்தின் தொடக்கத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணச் சந்தையில் வட்டி வீதங்களில் அழுத்தமொன்று ஏற்பட வழிவகுத்தது. நாணயக்

கொள்கை நிலையுடன் இசைந்து செல்லும் விதத்தில் குறுங்கால வட்டி வீதங்களைப் பேணும் நோக்குடன் நடத்தப்பட்ட மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் துணைநில் வீத வீச்சின் கீழ் எல்லையை நோக்கிய சீராக்கங்களை எடுத்துக்காட்டியது. அதேவேளை, 2019 ஓகத்தில் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைப்பு செய்யப்பட்டு முறையே 7.00 சதவீதம் மற்றும் 8.00 சதவீதத்திற்கு மாற்றியமைக்கப்பட்டதைத் தொடர்ந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் ஓர் குறிப்பிடத்தக்க கீழ் நோக்கிய சீராக்கத்தைக் குறித்துக்காட்டியது. மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலையினால் வழிநடத்தப்படுவதற்கு பதிலிறுத்துகின்ற விதத்தில், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் பொருத்தமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினூடாக துணைநில் வீத வீச்சின் நடு வீதத்தினை நோக்கி நகர அனுமதிக்கப்பட்டது. மத்திய வங்கியினால் தனியான முதனிலை வணிகர்களுக்கு திரவத்தன்மை ஆதரவு வசதி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமையின் காரணமாக சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை வழிநடத்த மத்திய வங்கிக்கு உதவியது என்பதுடன் இதன் மூலம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் சமிக்ஞைப்படுத்தும் பொறிமுறையும் மேம்படும். சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் அதேபோக்கினைப் பின்பற்றியது. திரவத்தன்மை ஆதரவு வசதியின் அறிமுகத்தால் 2019 செத்தெம்பரின் தொடக்கத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்திற்கும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதத்திற்குமிடையிலான இடைவெளி குறைவடைந்திருக்கிறது. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் 2019 செத்தெம்பர் இறுதியில் 7.45 சதவீதமாகவும் 7.50 சதவீதமாகவும் காணப்பட்டன.

வரைபடம் 8.14
துணைநில் வீத வீச்சு, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் மற்றும் சந்தைத் திரவத்தன்மை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- **2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை கலப்பான போக்கொன்றினை எடுத்துக்காட்டியது.** சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினை கொள்கை வீத வீச்சிற்குள் நாணயக் கொள்கை நிலையுடன் ஒத்துச்செல்லும் விதத்தில் பேணுகின்ற வேளையில் சந்தையில் போதுமான திரவத்தன்மையினைப் பேணுவதன் மூலமாக சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தில் ஏற்படக்கூடிய பாரிய தளம்பல்களைத் தவிர்ப்பதற்காக திரவத்தன்மை முகாமைத்துவத் தொழிற்பாடுகள் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, 2019இன் முதல் மூன்று மாத காலப்பகுதியில் மத்திய வங்கி திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்காக ஓரிரவு, குறுங்கால மற்றும் நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்திய வேளையில், உள்நாட்டுப் பணச் சந்தைக்கு திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்காக திறைசேரி உண்டியல்களின் உடனடிக் கொள்வனவுகளை நிரந்தர அடிப்படையில் மேற்கொண்டதன் மூலம் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் மத்திய வங்கி தீவிரமாக ஈடுபட்டிருந்தது. மேலும், மத்திய வங்கி 2018 நவெம்பரில் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினைக் குறைத்தமைக்குப் புறம்பாக, உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை அழுத்தத்தினைத் தளர்த்துவதற்காக 2019 மாச்சு 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மத்திய வங்கி நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை நூறு அடிப்படைப் புள்ளிகளினால் 5.00 சதவீதத்திற்குக் குறைத்தது. 2019 ஏப்பிறல் நடுப்பகுதி வரை திரவத்தன்மை நிலைமை தொடர்ந்தும் பற்றாக்குறை மட்டத்தில் காணப்பட்டமைக்கு, மத்திய வங்கியினால் வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டமையும் அதேபோன்று ஏப்பிறல் பண்டிகைக் காலத்தினைக் கருத்திற் கொண்டு நாணயங்கள் எடுப்பனவு செய்யப்பட்டமையுமே முக்கிய காரணங்களாகும். அதன் பின்னர், நாட்டிற்கான முறிகளின் பெறுகைகள் மாற்றப்பட்டமை, மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகள், பண்டிகைக் காலத்தின் பின்னர் நாணயங்கள் வைப்புச் செய்யப்பட்டமை என்பனவற்றின் காரணமாக 2019 ஏப்பிறல் நடுப்பகுதியிலிருந்து திரவத்தன்மைப்

8


பற்றாக்குறை, மிகை மட்டத்திற்கு மாற்றமடைந்தது. நியம தேவைப்பாட்டு விகிதச் சீராக்கங்களினூடான திரவத்தன்மை உள்ளீடுகள் பொருத்தமான திறந்த சந்தைத் தேவைப்பாடுகளுடன் இணைந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதம் படிப்படியாக வீழ்ச்சியடைய வழிவகுத்தன. 2019 மேயிலிருந்து உள்நாட்டுப் பணச் சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையினை மத்திய வங்கி ஓரிரவு - குறுங்கால மற்றும் நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்களினூடாக ஈர்த்துக் கொண்டது. சந்தை மிகையான மட்டத்தில் காணப்பட்ட போதும், திரவத்தன்மை, முக்கியமாகக் குறிப்பிட்ட வங்கிகளிடையே, குறிப்பாக, வெளிநாட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடையே திரண்டு காணப்பட்டது. உள்நாட்டுப் பணச் சந்தையில் காணப்பட்ட சீரற்ற திரவத்தன்மை விநியோகத்தினைப் பரிசீலனையில் கொண்டு, உள்நாட்டுப் பணச் சந்தையில் மிகையான திரவத்தன்மை காணப்பட்டமைக்கிடையிலும் மத்திய வங்கி சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தில் கீழ் நோக்கிய சீராக்கமொன்றினைத் தூண்டும் நோக்குடன் ஓரிரவு மற்றும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தியது. 2019 ஒகத்து இறுதியில், சுவப்ஸ் மற்றும் மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் முதிர்ச்சியடைந்தமையின் காரணமாக உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை எதிர்க்கணிய மட்டத்திற்கு மாற்றமடைந்தது. இதன் விளைவாக, மத்திய வங்கி ஓரிரவு, குறுங்கால மற்றும் நீண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்திய அதேவேளையில், நிரந்தர அடிப்படையில் சந்தைக்கு திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்காக திறைசேரி உண்டியல்களுக்காக உடனடி ஏலங்களை நடத்தியது. மேலும், உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகளில் எதிர்பார்க்கப்படக்கூடிய அசைவுகளைப் பரிசீலனையில் கொண்டு, மத்திய வங்கி, 2019 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து நிரந்தர அடிப்படையில் உள்நாட்டுப் பணச் சந்தைக்கு திரவத்தன்மையினை உள்ளீடு செய்வதற்காக திறைசேரி முறிகளின் உடனடிக் கொள்வனவிற்கான ஏலங்களை நடத்தியது. 2019 செத்தெம்பரில் மத்திய வங்கி திறைசேரி முறிகளின் உடமைக் கொள்வனவு ஏலங்களினூடாக உள்நாட்டுப் பணச் சந்தைக்கு ரூ.8.9 பில்லியனை உள்ளீடு செய்தது. மேலும், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் உள்நாட்டு நாணயத்திற்கு மாற்றல் செய்யப்பட்டமை 2019 செத்தெம்பரில் உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மை மட்டம் அதிகரிப்பதற்குப் பங்களித்தது. திரவத்தன்மை ஆதரவு வசதியின் கீழ், மத்திய வங்கி தனியான முதனிலை வணிகர்களின் குறுங்கால நிதியிடல் தேவைகளுக்கு உதவியளிப்பதற்காக 2019 செத்தெம்பரில் ஏறத்தாழ ரூ.17 பில்லியனை வழங்கியது. 2019 செத்தெம்பர் இறுதியில், சந்தைத் திரவத்தன்மை ஏறத்தாழ ரூ.23 பில்லியன் கொண்ட மிகையில் காணப்பட்டது.

### உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

- **2019இன் முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாய்ப் பெறுமதி 2018 திசெம்பர் இறுதியில் காணப்பட்ட ரூ.182.75 இலிருந்து 2019 செத்தெம்பரில் இறுதியில் ரூ.181.94 இற்கு 0.44 சதவீதத்தினால் தேய்வடைந்தது.** இறக்குமதிகளைக் குறைத்தல், வெளிநாட்டு அழுத்தங்களை இலகுபடுத்தல் மற்றும் ஏற்றுமதி வருவாய்களின் அதிகரிப்பு மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் போன்ற 2018இன் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வழிமுறைகளின் சாதகமான தாக்கத்தின் விளைவாக 2019இன் முதலரைப்பகுதியில் செலாவணி மாற்று விகிதமானது அதிவேகத்தில் வலுவடைய வழிவகுத்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலினைத் தொடர்ந்து செலாவணி விகிதத்தின் அழுத்தத்தில் சிறிதளவு அதிகரிப்பு மற்றும் தாக்குதலினை உடனடுத்து அவதானிக்கப்பட்ட சுற்றுலாவின் பேரிலான உட்பாய்ச்சல்களின் வீழ்ச்சி, 2019 மேயில் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஆறாவது தொகுதியினைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட தாமதம் என்பனவற்றிற்கிடையிலும், 2019 யூனில் இடம்பெற்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் மூலம் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை

வரைபடம் 8.15

ஐக்கிய அமெரிக்க டொலரொன்றிற்கான ரூபாயின் அசைவு




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

8

ரூபாவின் பெறுமதியைப் பேண உதவியது. அதன்படி, 2019இன் முதலரைப்பகுதியில் இலங்கை ரூபாய் 3.53 சதவீதத்தினால் உயர்வடைந்தது. எனினும், அரச பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் திருப்பிப் பெற்றுக்கொள்ளப்பட்டமையின் காரணத்தினால் ஓகத்து மாதமளவில் இந்த நிலைமை மாற்றமடைந்ததுடன் 2019 செத்தெம்பர் வரை அது தொடர்ந்தது. மேலும், 2018இல் விதிக்கப்பட்ட கொள்கை வழிமுறைகள் தளர்த்தப்பட்டமையினைத் தொடர்ந்து ஊர்திகளுக்கான இறக்குமதி கேள்வியில் ஏற்பட்ட படிப்படியான அதிகரிப்பு மற்றும் 2019இன் மூன்றாம் காலாண்டில் எண்ணெய் இறக்குமதியின் பொருட்டு ஏற்பட்ட வெளிநாட்டு நாணயத்திற்கான உயர் கேள்வி என்பன காரணமாக செலாவணி வீதம் 2.98 சதவீதத்தினால் தேய்வடைவதற்கு வழிவகுத்தது. இதற்கமைய, 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது 0.44 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அதேவேளை, 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இலங்கை ரூபாயானது இந்திய ரூபாய் அதே போல அவுஸ்திரேலியா டொலர், ஸ்ரேலிங் பவுண் மற்றும் யூரோ போன்ற ஏனைய பிரதான நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்த அதேவேளையில் யப்பான் யென்னுக்கெதிராக தேய்வடைந்தது.

- **2019இன் முதலரைப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியானது உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் தேறிய கொள்வனவாளராகக் காணப்பட்டது.** செலாவணி சந்தையில் மிகையான தளம்பல்கள் காணப்பட்ட காலப்பகுதியில் மிதமான விற்பனைகள் காணப்பட்டமைக்கிடையிலும் சந்தையில் ஐ.அ.டொலரின் தொடர்ச்சியான கொள்வனவானது நாட்டினுடைய வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு மத்திய வங்கியை இயலச்செய்தது. அதற்கேற்ப, செத்தெம்பர் இறுதி வரையான காலப்பகுதியில் மத்திய வங்கியானது ஐ.அ.டொலர் 469.7 மில்லியனை உள்ளீர்த்ததுடன் ஐ.அ.டொலர் 184.9 மில்லியனை வழங்கல் செய்தமையின் மூலம் ஐ.அ.டொலர் 284.8 மில்லியன் கொண்ட தேறிய கொள்வனவை ஏற்படுத்தியது.

- **2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில், வங்கிகளுக்கிடையிலான உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் வர்த்தக அளவுகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 13.6 சதவீதத்தினால் அதிகரித்தன.** இக்காலப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவானது 2018இன் தொடர்புடைய காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 13.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 14.9 பில்லியனாகக் காணப்பட்டது. இதனுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டு செலாவணி சந்தையில் நாளாந்த சராசரி அளவுகளானது 2018இன் தொடர்புடைய காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 73 மில்லியனிலிருந்து 2019இன் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 82 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, 2019இன் செத்தெம்பர் இறுதி வரையான காலப்பகுதியில் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவானது 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 5.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனுக்கு அதிகரித்தது.

### அரசாங்கப் பிணையங்கள் சந்தை

- **2019ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியின் போது, அரசாங்கத்தின் முக்கிய கடன்பெறுகைகள், வெளிநாட்டு நாணயச் சந்தைகளிலிருந்து திரட்டப்பட்டன.** பன்னாட்டு மூலதன சந்தைகளில் நிலவிய ஆக்கபூர்வமான வாய்ப்புகளை பயன்படுத்தி இலங்கை அரசாங்கமானது 2019இன் முதலரைப் பகுதியின் போது ஐ.அ.டொலர் 4.4 பில்லியன் தொகையுடைய நாட்டுக்கான பன்னாட்டு முறிகளையும் ஐ.அ.டொலர் 345.2 மில்லியன் தொகையுடைய இலங்கை அபிவிருத்தி முறிகளையும் வழங்கியது. இவ்வழங்கல்கள் மூலம் உள்நாட்டுச் சந்தையில் கிடைக்கத்தக்க முதலிடத்தக்க நிதியங்கள் இல்லாமல் போகும் சாத்தியப்பாடுகளை எதிரீடு செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தன. அதேவேளை, உள்நாட்டுச் சந்தையில் திறைசேரி முறிகளினதும் திறைசேரி உண்டியல்களினதும் முதலாந்தரச் சந்தைகளின் விளைவு வீதங்கள், ஆண்டின் தொடக்கக் காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட அதன் அதிகரிக்கின்ற போக்கிலிருந்து நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் காணப்பட்டமை அத்துடன் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலை என்பவற்றுக்கு இசைவாக முன்னைய அதிகரித்துச் செல்லும் நிலையிலிருந்து திரும்பலடைந்து 2019இன் முதலரைப்பகுதியின் பின்னைய காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது.

- **2018இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதலரைப்பகுதியின் இறுதியளவில் அரசாங்கப் பிணையங்களில் இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையியில் கீழ் நோக்கிய நகர்வு அவதானிக்கப்பட்டது.** 2018இன் நான்காம் காலாண்டிலும் 2019இன் தொடக்கக் காலப்பகுதியின்

8

வரைபடம் 8.16

அரச பிணையங்களின் இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

போதும் அதிகரிக்கின்ற போக்கொன்றினைக் காண்பித்த இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்கள், 2019 மாச்சு மற்றும் யூன் மாதங்களில் முறையே ஐ.அ.டொலர் 2.4 பில்லியன் தொகையுடைய மற்றும் ஐ.அ.டொலர் 2.0 பில்லியன் தொகையுடைய நாட்டுக்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலுடன் இணைந்த சாதகமான சந்தை மனப்பாங்குகளைப் பிரதிபலித்து 2019இன் இரண்டாம் அரைப்பகுதி தொடக்கம் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன. அதற்கமைய, 2019 யூன் இறுதியளவில் 91 - நாட்கள், 182 - நாட்கள் மற்றும் 364 - நாட்கள் கொண்ட முதிர்ச்சிகளுடன் கூடிய திறைசேரி உண்டியல்களின் இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்கள், 2018 இறுதியில் நிலவிய வீதங்களிலிருந்து முறையே 139 அடிப்படைப் புள்ளிகளாலும் 153 அடிப்படைப் புள்ளிகளாலும் 227 அடிப்படைப் புள்ளிகளாலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, 2 தொடக்கம் 10 வருடங்கள் வீச்சிலான முதிர்வுகளுடன் கூடிய முனைப்புடன் கொடுக்கல்வாங்கல் செய்யப்பட்ட திறைசேரி முறிகளின் சந்தை விளைவு வீதங்கள், மீளாய்வுக்குட்படுகின்ற காலப்பகுதியின் போது 34 தொடக்கம் 109 வரையான அடிப்படைப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தன. அதிகரித்த வெளிப்படைத்தன்மை மற்றும் எதிர்வுகூறும் தன்மையுடன் ஒன்றிணைந்த அரசாங்கப் பிணையங்களின் வழங்கல் செயன்முறை மற்றும் நாட்டுக்கான பன்னாட்டு முறி வழங்கலிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகை, படுகடன் தீர்ப்பனவுகள் சுழற்சியுடன் கூடிய அரசாங்கப் பிணையங்களின் வழங்கல் என்பன 2019 ஓகத்து நடுப்பகுதி வரை உள்நாட்டுச் சந்தையில் வட்டி வீதங்கள் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்கு சாதகமாகப் பங்களித்தது. மேலும், 2019 சனவரி 18 தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் மொத்த செலுத்த வேண்டிய இருப்பின் 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீடுகளின் அடிப்படை அளவினைக் குறைத்தல் மற்றும் இலங்கை உட்பட வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரங்களிலிருந்தான தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் என்பவற்றின் ஒன்றிணைந்த விளைவினை பிரதிபலித்து, திறைசேரி உண்டியல்களினதும் திறைசேரி முறிகளினதும் வதியாதோர் முதலீட்டுடமைகள் 2018இன் இறுதியில் பதிவாகியிருந்த ரூ.158.8 பில்லியனிலிருந்து 2019 யூன் இறுதியளவில் ரூ.142.7 பில்லியனாக 10.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

### கம்பனிப் படுகடன் பிணையங்கள் சந்தை

- **வர்த்தகப் பத்திரத்திற்கான சந்தையின் நடவடிக்கைகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சிறிதளவு முன்னேற்றமடைந்திருந்தன.** 2018இன் தொடர்பான காலப்பகுதியில் வழங்கப்பட்ட ரூ.1.7 பில்லியன் பெறுமதியுடைய வர்த்தகப் பத்திரங்களுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ரூ.2.4 பில்லியன் பெறுமதியுடைய வர்த்தகப் பத்திரங்கள் வங்கிகளின் உதவியுடன் வழங்கப்பட்டுள்ளன. வர்த்தகப் பத்திரங்கள் தொடர்பான வட்டி வீதங்கள் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் காணப்பட்ட 13.10 - 15.00 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 14.85 - 16.25 சதவீச வீச்சில் காணப்பட்டது. ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மூன்று மாதங்கள் வரையிலான முதிர்ச்சியைக் கொண்ட வர்த்தகப் பத்திரங்கள் சந்தையின் 88.7 சதவீதத்திற்கு வகைகூறிய அதேவேளையில் பன்னிரண்டு மாதங்கள் வரையிலான முதிர்ச்சியைக் கொண்ட ரூ.822.9 மில்லியன் பெறுமதியான ஒரு வர்த்தகப் பத்திர வழங்கலும் பதிவாகியிருந்தது. வர்த்தகப் பத்திரத்தின் மொத்த வெளிநின்ற தொகை 2018 ஓகத்தின் ரூ.1.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 ஓகத்தில் ரூ.2.2 பில்லியனாகக் காணப்பட்டது.

- **2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் கம்பனி முறிகள் சந்தையின் புதிய வழங்கல்கள் குறைவடைந்து காணப்பட்டன.** முன்னைய ஆண்டின் அதே காலப்பகுதியில் 10 நிறுவனங்களால் பட்டியலிடப்பட்ட 20 தொகுதிக்கடன் பத்திர வழங்கல்களுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் 9 நிறுவனங்களால் பட்டியலிடப்பட்ட 17 தொகுதிக் கடன் பத்திர வழங்கல்கள் காணப்பட்டது. அதற்கமைய

8

அட்டவணை 8.8

பங்குரிமை மூலதனச் சந்தை - தெரிவுசெய்யப்பட்ட குறிகாட்டிகள்

| விடயம் | 2017 முடிவில் | 2018 செத் | 2018 முடிவில் | 2019 செத் |
|---|---|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் (1985=100) | 6,369.3 | 5,862.2 | 6,052.4 | 5,738.2 |
| திகதி வரையிலான மாற்றம் (%) | 2.3 | -8.0 | -5.0 | -5.2 |
| எஸ் அன்ட் பீ இலங்கை 20 சுட்டெண் (2004=1,000) | 3,671.7 | 3,002.0 | 3,135.2 | 2,759.2 |
| திகதி வரையிலான மாற்றம் (%) | 5.0 | -18.2 | -14.6 | -12.0 |
| சந்தை மூலதனமாக்கல் (ரூ. பில்லியன்) | 2,899.3 | 2,752.9 | 2,839.5 | 2,709.2 |
| மொ.உ.உ..யின் சதவீதமாக (%)(அ) | 20.1 | 19.1 | 19.7 | 18.7 |
| சந்தை விலை உழைப்பு விகிதம் | 10.6 | 9.2 | 9.7 | 10.2 |
| சராசரி நாளாந்தப் புரள்வு (ரூ. மில்லியன்) | 915.3 | 787.6 | 833.6 | 661.0 |
| தேறிய ஒன்றுசேர்ந்த வெளிநாட்டுக் கொள்வனவுகள் (ரூ. மில்) | 17,657.4 | -6,118.2 | -23,247.5 | -2,570.4 |
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை | 296 | 297 | 297 | 290 |
| உரிமை வழங்கல்களின் எண்ணிக்கை | 15 | 14 | 16 | 14 |
| உரிமை வழங்கல்களின் மூலம் திரட்டப்பட்ட தொகை (ரூ.பில்லியன்) | 50.6 | 38.1 | 42.2 | 30.6 |
| ஆரம்பப் பங்கு வழங்கல் | 2 | 2 | 2 | 1 |
| ஆரம்பப் பங்கு வழங்கல்கள் மூலம் திரட்டப்பட்ட தொகை (ரூ.பில்லியன்) | 1.0 | 2.0 | 2.0 | 0.4 |

(அ) 2018இற்கான மொ.உ.உ. ஐ அடிப்படையாகக் கொண்டது (ரூ. 14,450 பில்லியன்)

*மூலம்:* கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை


முன்னைய ஆண்டின் அதேகாலப்பகுதியில் தொகுதிக் கடன் மூலமாகத் திரட்டப்பட்ட நிதியின் பதிவு செய்யப்பட்ட ரூ.55.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஒன்பது மாதங்களில் திரட்டப்பட்ட மொத்த நிதியம் ரூ.35.6 பில்லியனாகக் குறைவடைந்தது. இம்முறிகளின் வட்டி வீதங்கள் 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியின் 12.00 - 14.75 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019இன் அதேகாலப்பகுதியில் 12.88 - 15.50 சதவீத வீச்சில் காணப்பட்டது.

## பங்குரிமைச் சந்தை

- **2018இன் இறுதிக் காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை செயற்றிறனின் பிரகாசமற்ற தன்மை 2019இன் முதல் ஒன்பது மாதங்களுக்கும் தொடர்ந்ததுடன் அக்காலம் முழுவதுமான விலைச் சுட்டெண்கள் தளம்பல் அசைவுடன் காணப்பட்டன.** உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பாதகமான அதிர்ச்சியின் உடனடியான வெளிப்பாடாக 2019 ஏப்பிறல் 23இல் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் இலங்கை 20 சுட்டெண்கள் முறையே 3.6 சதவீதத்தாலும் 4.4 சதவீதத்தாலும் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தது. 2019 யூன் இறுதியில் 8.4 தடவைகள் என்கின்ற குறைவான சந்தை விலை வருவாய் விகிதம் நிலவியமையால் பங்குச் சந்தையில் நிலவிய குறைந்த விலையில் உள்ளூர் முதலீட்டாளர்கள் தமது முதலீட்டை ஆரம்பித்தமையால் 2019 யூலை மாதம் பங்குரிமைச் சந்தையின் செயலாற்றம் உயர்த்தப்பட்டது. இருந்தபோதிலும், பங்குச் சந்தையின் இப்போக்கு 2019 ஓகத்து மற்றும் செத்தெம்பர் மாதங்களில் தொடரவில்லை.

வரைபடம் 8.17


பங்கு விலைச் சுட்டெண்களின் நகர்வுகள்




*மூலம்:* கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

வரைபடம் 8.18

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டுப் பங்குபற்றல்




*மூலம்:* கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

- **2019 செத்தெம்பர் வரையான காலப்பகுதியில், அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்டான்டட் அன்ட் புவர்ஸ் இலங்கை 20 விலைச் சுட்டெண்கள் முறையே 5.2, 12.0 சதவீதத்தால் குறைவடைந்தன.** சந்தை மூலதனமாக்கல் 2018இன் இறுதியில் காணப்பட்ட ரூ.2,839.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 செத்தெம்பர் இறுதியில் ரூ.2,709.2 பில்லியனுக்கு குறைவடைந்தது. அதேவேளையில், சராசரி நாளாந்த புரள்வு முன்னைய ஆண்டின் ரூ.833.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ரூ.661.0 மில்லியனுக்குக் குறைவடைந்தது. திரட்டப்பட்ட வெளிநாட்டு விற்பனை 2018 செத்தெம்பர் இறுதியில் பதிவுசெய்த ரூ.6.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 செத்தெம்பரில் ரூ.2.6 பில்லியனைப் பதிவுசெய்திருந்தது. சந்தை விலை வருவாய் விகிதமானது 2018 செத்தெம்பர் இறுதியில் காணப்பட்ட 9.2 மடங்குடன் ஒப்பிடுகையில் 2019 செத்தெம்பர் இறுதியில் 10.2 மடங்காக அதிகரித்தது. 2018ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் இரண்டு முதன்மை பொது வழங்கல்கள் மூலம் திரட்டப்பட்ட ரூ.2.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ஒரு முதன்மைப் பொது வழங்கல் மூலம் ரூ.0.4 பில்லியன் திரட்டப்பட்டது. மேலும், 2018இன் குறித்த காலப்பகுதியில் 14 உரிமை வழங்கல்கள் மூலம் திரட்டிய ரூ.38.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இன் குறித்த காலப்பகுதியில் 14 உரிமை வழங்கல்களூடாக ரூ.30.6 பில்லியன் திரட்டப்பட்டது.

## நிதியியல் உட்கட்டமைப்பின் அபிவிருத்திகள்

### கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள்

- **நெருக்கமாக ஒருங்கிணைக்கப்பட்ட இரண்டு முறைமைகளான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை மற்றும் லங்காசெகுயர் முறைமை என்பனவற்றை உள்ளடக்கிய லங்காசெட்டில் முறைமையானது நாட்டில் உயர் பெறுமதி கொண்ட கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கான பாதுகாப்பானதும், நம்பகமானதுமான பொறிமுறையொன்றினைத் தொடர்ந்தும் வழங்கியது.** அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையானது உயர் பெறுமதி கொண்ட நேர முக்கியத்துவம் வாய்ந்த வாடிக்கையாளர் மற்றும் வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தது. அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கொடுக்கல்வாங்கல்களின் நாளாந்தச் சராசரி அளவும் பெறுமதியும் 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் முறையே 1,803 ஆகவும் ரூ.519 பில்லியனாகவும் இருந்தன.
- **காசோலைத் தீர்ப்பனவின் வினைத்திறனை அதிகரிக்கும் குறிக்கோளுடன், 2006இல் அறிமுகப்படுத்தப்பட்ட காசோலைப் பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையானது நாடளாவிய முறையில் காசோலை தேறல் செய்யும் நேரத்தினை ஒரு நாளுக்குக் குறைத்தமையின் மூலம் (T+1) சில்லறைக் கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்குத் தொடர்ந்தும் வினைத்திறனுடன் செயலாற்றியது.** 2019இன் முதல் ஒன்பது மாதகாலப் பகுதியில் காசோலைகளின் தீர்ப்பனவு செய்யப்பட்ட மொத்த அளவும் பெறுமதியும் முறையே 193,979 ஆகவும் ரூ.41 பில்லியனாகவும் விளங்கின.
- **உயர் கொடுக்கல்வாங்கல் அளவுகளை வசதிப்படுத்துவதற்காக அதேநேரக் கணனிப் பொறிமுறையொன்றை வழங்குகின்ற இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையானது தொடர்பான காலப்பகுதியில் தொடர்ந்தும் சுமுகமாகத் தொழிற்பட்டது.** 2019ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினூடாகத் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் அளவும் பெறுமதியும் முறையே 148,648 ஆகவும் ரூ.9 பில்லியனாகவும் காணப்பட்டன.
- **பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியினுடைய துணை ஆளிகளான பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி, பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி, பகிரப்பட்ட தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி, பொதுவான விற்பனை நிலைய ஆளி மற்றும் பொதுவான செல்லிடத் தொலைபேசி ஆளி என்பனவற்றை நிறுவுவதற்கு இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் வசதியளித்தது.** பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியானது “லங்காபே” என்ற வர்த்தக நாமத்தின் கீழ் லங்காகிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்பட்டு வருகின்றது.
- **பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளி வலையமைப்பின் மூலம் ஏதேனும் தன்னியக்கக் கூற்றுப்பொறியிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட உள்நாட்டு தன்னியக்கக் கூற்றுப்பொறிக் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்கும். பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளியானது 2013 யூலையில் அதன் நேரடித் தொழிற்பாடுகளைத் தொடங்கியது.** பொதுவான தன்னியக்கக்கூற்றுப்பொறி

8

ஆளி முறைமைக் கொடுக்கல்வாங்கல்களின் நாளாந்த சராசரி அளவும் பெறுமதியும் 2019இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் முறையே 125,891 ஆகவும் ரூ.1.1 பில்லியனாகவும் இருந்தன. பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி வலையமைப்பினூடாக மேற்கொள்ளப்பட்ட அட்டைகளின் கொடுக்கல்வாங்கல்களினது பாதுகாப்பினை அதிகரிக்கும் பொருட்டு பொதுவான தன்னியக்கக்கூற்றுப்பொறி ஆளி உறுப்பினர்கள் அவர்களினால் நிறுவப்பட்டுள்ள தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆளிகளில் யூரோபே, மாஸ்டர் அட்டை மற்றும் விசா அட்டைத் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

- **தன்னியக்கக் கூற்றுப் பொறி, இணையத்தள வங்கித்தொழில், செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில், கியோஸ்க்ஸ் மற்றும் கருமபீடத்திலான கொடுப்பனவு போன்ற பல்வேறு கொடுப்பனவு வழிப்படுத்தல்களினூடாக மேற்கொள்ளப்படும் தெளிவான கொடுப்பனவுகளுக்கு பொதுவான உட்கட்டமைப்பொன்றை வழங்குகின்ற பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி 2015 ஓகத்தில் நடைமுறைக்கிடப்பட்டது.** பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளிக் கொடுக்கல்வாங்கல்களின் நாளாந்த சராசரி அளவும் பெறுமதியும் 2019 இன் முதல் ஒன்பது மாதகாலப்பகுதியில் முறையே 36,875 ஆகவும் ரூ.3.5 பில்லியனாகவும் காணப்பட்டன. டிஜிட்டல் கொடுப்பனவு பொறிமுறைகள் அறிமுகத்தினுடைய தேவைப்பாடு தொடர்பாக, பொதுமக்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் அதேநேரக் கொடுப்பனவுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினை அடிப்படையாகக் கொண்டு லங்காபே, அதேநேரக் கொடுப்பனவு தளத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்புதலை மத்திய வங்கி வழங்கியது. லங்காபே அதேநேரக் கொடுப்பனவுத் தளமானது இலங்கைச் சுங்கத்திற்கான அதேநேரக் கொடுப்பனவுடன் இணைந்து செயற்படுவதற்கு ஏனைய பல நிறுவனங்களுக்கு மத்திய வங்கி ஒப்புதல் வழங்கியது. ஆய்வுக்குரிய காலப்பகுதியில் குறைந்த பெறுமதியிலான பணத்தினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவுகளை சுமுகமாக செயற்படுத்துவதை இலக்காகக் கொண்டு பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினை அடிப்படையாகக் கொண்ட மற்றுமொரு கொடுப்பனவு பொறிமுறையான ஜஸ்ட்பே 2017ஆம் ஆண்டு நடைமுறைக்கிடப்பட்டது.

- **பொதுவான விற்பனை நிலைய ஆளி முனைக்கோடிகளில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு அட்டைக் கொடுக்கல்வாங்கல்களுக்காக ஆளி மற்றும் தீர்வக வசதிகளை வழங்குகின்ற பொதுவான விற்பனை நிலைய ஆளியானது 2019 யூனில் அதன் நேரடித் தொழிற்பாடுகளைத் தொடங்கியது.** உரிமம் பெற்ற நிதியியல் கையேற்பாளர்களாக தொழிற்படுவதற்கு மூன்று உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பொதுவான விற்பனை நிலைய ஆளியுடன் இணைந்துள்ள அதேவேளை தேசிய அட்டை திட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று பற்றுஅட்டைகளை விநியோகிப்பதற்கு தொடங்கிவிட்டது.

- **கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான ஆலோசனை மற்றும் கண்காணிப்புக் குழுவாக விளங்கும் தேசியக் கொடுப்பனவு ஆணைக்குழுவானது 2019-2021 காலப்பகுதிக்குரிய அதன் வழிகாட்டலை இறுதிப்படுத்தியது.** வழிகாட்டலானது வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு உட்கட்டமைப்பினை விரிவுபடுத்தல், இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஊக்குவித்தல், தரப்படுத்தல் மற்றும் இயங்கும் தன்மை, கொடுப்பனவு முறைமைகளுக்கான கண்டுபிடிப்புக்கள், கொடுப்பனவு முறைமைப் பாதுகாப்பினை வலுப்படுத்தல் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டல் போன்ற துறைகளை பரந்தளவில் உள்ளடக்கியுள்ளது. மேலும், தேசிய கொடுப்பனவு ஆணைக்குழுவானது டிஜிட்டல் கொடுப்பனவுத் தளம், பயன்பாட்டு நிரலாக்க இடைமுகத்தைத் திறத்தல் மற்றும் மெய்நிகர் வங்கித்தொழில் போன்ற புதிய கண்டுபிடிப்புக்கள் மீது கவனம் செலுத்துவதற்காக பின்டெக் குழு ஒன்றினை நியமித்துள்ளது. அதற்கு மேலதிகமாக, தேசிய கொடுப்பனவு ஆணைக்குழுவானது நிதியியல் உள்ளடக்கத்தினை ஊக்குவிக்க டிஜிட்டல் மயமாக்கலைப் பயன்படுத்துதல் என்ற நோக்கத்துடன் நிதியியல் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்துவதற்கான கொடுப்பனவுகளின் டிஜிட்டல் மயமாக்கலை ஊக்குவிப்பது தொடர்பில் குழு ஒன்றினை நியமித்துள்ளது.

- **கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களமானது வாடிக்கையாளர் வசதிகளை ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் வேறுபட்ட கொடுப்பனவுப் பொறிமுறை மற்றும் கருவிகளினுடைய இயங்குதன்மையினை உறுதிப்படுத்துவதற்காக "லங்கா கியூஆர்" என்ற குறித்த வியாபார நாமம் உடைய தேசிய விரைவுப்பதிலிறுப்பு குறியீட்டை வெளியிட்டது.** 2019ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கொடுப்பனவுத் சாதனங்களை அடிப்படையாகக் கொண்ட "லங்கா கியூஆர்" பல நிதி நிறுவனங்களினால் ஆரம்பிக்கப்பட்ட அதேவேளை, ஏனைய பல நிதி நிறுவனங்கள் "லங்கா

கியூஆர்" ஐ அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு சாதனங்களை அபிவிருத்தி செய்யும் செய்முறையில் ஈடுபட்டுவருகின்றன.

## பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

- **நிதியியல் உளவறிதல் பிரிவு காத்திரமான கண்காணிப்பு மற்றும் நடைமுறைக்கிடல், தலத்திலான மற்றும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்புக்கள், கருத்தரங்குகளினூடாக விழிப்புணர்வினை ஏற்படுத்தல் மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மீது இணங்குவிப்பு மீளாய்வுக் கூட்டங்களை நடத்துதல் என்பனவற்றின் மூலம் அறிக்கையிடுகின்ற நிறுவனங்களின் இணங்குவிப்புகளை உறுதிப்படுத்துவதற்காக அதன் பல்முனை உபாயங்களை வலுப்படுத்தியிருக்கிறது.** ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்திற்கும் அதன் கீழ் விடுக்கப்பட்ட வாடிக்கையாளர் உரிய விழிப்புணர்வுக்கான விதிகள் மற்றும் ஏனைய விதிகள், ஒழுங்குவிதிகள் என்பனவற்றுடன் நிதியியல் நிறுவனங்கள் (அதாவது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் பங்குத் தரகர்கள்) இணங்கி ஒழுகுவதனை மதிப்பிடுவதற்காக 25 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட தலத்திலான பரீட்சிப்புக்கள் நடத்தப்பட்டன. நிதியியல் உளவறிதல் பிரிவு 29 எச்சரிக்கைக் கடிதங்களையும் 4 காரணங்களைக்காட்டுமாறு கேட்டுக்கொள்ளும் கடிதங்களையும் வழங்கியதுடன் நிதியியல் நிறுவனங்களின் மூத்த முகாமைத்துவத்துடன் 7 பின் தொடர் கலந்துரையாடல்களையும் நடத்திய அதேவேளையில், பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் பணத்தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத்தவறிய நிதியியல் நிறுவனங்களுக்கெதிராக விகிதசமமானதும் தடுப்பதற்குமான தடைகள் விதிக்கப்பட்டன.
- **பணம் தூயதாக்கல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கான உயர் இடர்நேர்வினைக் கொண்ட துறைகளாக இனம் காணப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ நிறுவனங்கள் தொடர்பில் (காசினோ, இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் மற்றும் உண்மைச்சொத்து துறைகள்) 24 இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வைகள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் நிதியியல் உளவறிதல் பிரிவு இவ்வாண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் அதன் நிறுவன ரீதியான இணங்குவிப்புக்களின் மதிப்பீட்டு செயற்பரப்பினை விரிவாக்கிக் கொண்டது.** தலத்திலான பரீட்சிப்புக்களின் போது அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை அறிவிப்பதற்காகவும் அக்குறைபாடுகளைத் திருத்திக்கொள்வதற்காக கால வரையறைகளுடன் கூடிய நடவடிக்கைத் திட்டத்தினை வழங்குவதற்காகவும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ நிறுவனங்களுக்கு 15 எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டன. மேலும், பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வை செயன்முறைகளையும் நிறுவன ரீதியான இணங்குவிப்புகளையும் மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் நிதியியல் உளவறிதல் பிரிவு சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல், இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் அடிப்படையில் தற்போது இடம்பெற்றுவரும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுதல், உரிய விழிப்புக்கவனத்தினை அதிகரித்தல், பயன்பெறும் சொத்துடமையினை அடையாளம் காணுதல் மற்றும் அரசியல் ரீதியாக முகங்கொடுக்கும் ஆட்களை அடையாளம் காணுதல் என்பன மீது ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் பல்வேறு ஒழுங்குவிதிகளையும் வழிகாட்டல்களையும் வகுத்தது.
- **2017 நவெம்பரில் நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின்[3] இணங்குவிப்பு ஆவணமான "சாம்பல் பட்டியல்" இல் பட்டியலிடப்பட்டதிலிருந்து நிதியியல் உளவறிதல் பிரிவும் இலங்கையின் ஆர்வலர்களும் பணம் தூயதாக்கலுகெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நடவடிக்கைகளிலுள்ள அடையாளம் காணப்பட்ட உபாயக் குறைபாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட காலவரையறைகளுடன் கூடிய நடவடிக்கைத் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு**

3 நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு என்பது, பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் பாரிய சேதங்களை விளைவிக்கும் ஆயுதப் பெருக்கத்திற்கு நிதியளித்தல் என்பனவற்றிலிருந்து உலகளாவிய நிதியியல் முறைமையினை பாதுகாப்பதற்கான கொள்கையினை உருவாக்கி ஊக்குவித்துவருகின்ற அரசாங்கங்களுக்கிடையிலான ஒரு சுயாதீனமான அமைப்பாகும்.

**செய்வதனை நோக்கி பல்வேறு எண்ணிக்கையான காத்திரமான நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.** இவ்வழிமுறைகள், 2018ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பொறுப்பு நம்பிக்கை (திருத்தச்) சட்டம், 2018ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவி (திருத்தச்) சட்டம் என்பனவற்றை நிறைவேற்றியமை, வடகொரியா மற்றும் ஈரான் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவது மீதான ஒழுங்குவிதிகள்/ பணிப்புக்கள்/ வழிகாட்டல்களினை வழங்கியமை உரிய விழிப்புணர்வுக்கான விதிகளைவிடுத்ததன் மூலமாக குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத்தினை உள்ளடக்கத்தக்க விதத்தில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிப்பதனை விரிவுபடுத்தியமை, இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்டு குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிபுணர்களின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வையினை நடத்தியமை, அவதானிக்கப்பட்ட இணங்குவிக்காமை மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டமை, நிதியியல் மற்றும் குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத்திற்காக பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கடப்பாடுகள் மீது தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டமை, பயன்பெறுநர் சொத்துரிமையின் தகவல்களை அடையாளம் காணுதல் மற்றும் இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளை நடைமுறைப்படுத்தியமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

- **நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு, நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அடைந்த முன்னேற்றத்தினை ஆசிய பசுபிக் கூட்டு குழுமத்தினூடாக மதிப்பீடு செய்தது.** ஆசிய பசுபிக் கூட்டுக்குழு இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்திருப்பதனை ஏற்றுக்கொண்டதன் மூலம் 2019 பெப்புருவரியில் நடைபெற்ற நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் முழு நிறைவான சமவாயம் இலங்கை அதன் நடவடிக்கைத் திட்டத்தினை கணிசமானளவிற்கு நிறைவு செய்துள்ளது என்ற ஆரம்ப தீர்மானத்தினை மேற்கொண்டது. அதனைத் தொடர்ந்து 2019 செத்தெம்பர் 16-17 காலப்பகுதியில் நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் நடவடிக்கைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமையினை சரிபார்ப்பதற்காக நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழுவின் பன்னாட்டு ஒத்துழைப்பு மீளாய்வுக்குழுவினால் தலத்திலான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டது. பன்னாட்டு ஒத்துழைப்பு மீளாய்வுக்குழுவின் பிரதிநிதிகள் அனைத்து தொடர்பான ஆர்வலர்களுடனும் தனியார் துறையினருடனும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கையின் அரசியல் மற்றும் நிறுவன ரீதியான கடப்பாடுகளைக் கண்டறிந்து கொள்வதற்காக உயர்மட்ட அரசியல் அதிகாரிகளுடனும் நேருக்கு நேரான சந்திப்புக்களை நடத்தியது. இலங்கையின் முன்னேற்றம் தொடர்பாக மீளாய்வுக் குழுவினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்கள் 2019 ஒத்தோபரில் நடைபெற்ற நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவின் முழு நிறைவான சமவாயத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் அனைத்து உறுப்பினர்களும் “சாம்பல் நிறப்பட்டியலில்” இருந்து இலங்கையினை நீக்குவது தொடர்பான கலந்துரையாடலை அங்கீகரித்தனர். நிதியியல் நடவடிக்கைச் செயலணிக் குழுவினால் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டமையானது இலங்கையின் பொருளாதாரம் மற்றும் நிதியியலின் மீது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### நிதியியல் துறையுடன் தொடர்பான சட்டச் சீர்திருத்தங்கள்

- **நிதியியல் முறைமையின் சுமுகமான செயற்பாட்டிற்கு உதவும் நோக்குடன் தொடர்பான காலப்பகுதியில் பல்வேறு சட்டச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.** 2019ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், 1988ம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம், 2011ம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம், 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றம் கொடுத்துத் தீர்த்தல்கள் முறைமைகள் சட்டம், 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம், 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேறி உண்டியல்கள் கட்டளைச் சட்டம், 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் ஆகியவற்றை திருத்துவதற்கான ஏற்பாடுகளும், கலந்துரையாடல்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

### தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்

- **மத்திய வங்கி தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான செயன்முறைகளை**

8

**ஆரம்பித்துள்ளதோடு அதனை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.** சட்ட அமுலாக்கம் மற்றும் விசாரணைகளை மேற்கொள்வது தொடர்பில் தீர்மானக் குழு மற்றும் செயற்பாட்டுச் செயன்முறைகள் உருவாக்கப்பட்டது. அங்கீகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்கள் மீது முறையே நிதி வியாபார சட்டம் மற்றும் வங்கித்தொழில் சட்டம் ஆகியவற்றின் தொடர்புடைய ஏற்பாடுகளின் கீழ் பல்வேறு புலன்விசாரணைகள் நடாத்தப்பட்டன. நாடளாவிய ரீதியில் அங்கீகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட திட்டங்களின் மோசமான பாதிப்புக்கள் தொடர்பில் பல்வேறுபட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தது. மேலும், ஐக்கி அமெரிக்க திறைசேரியிலிருந்தான வதிவிட ஆலோசகரின் தொழில்நுட்ப உதவியுடன் ஓர் விரிவான தீர்மானக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது.

- **இவ்வாண்டில் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்கள கோரல் முறைமை விருத்தி செய்யப்பட்டுள்ளதோடு இது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தினால் இழப்பீட்டுக் கொடுப்பனவுக்காக பயன்படுத்தப்படுகிறது.** 2018 காலகட்டத்தில் சென்றல் இன்வெஸ்ற்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் த ஸ்ராண்டட் கிறெடிற் பினான்ஸ் லிமிட்டெட் என்கிற இரு நிதிக்கம்பனிகளின் உரிமத்தை நாணயச் சபை இரத்துச் செய்திருந்தது. இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தினால் சென்றல் இன்வெஸ்ற்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி 2,800 வைப்பாளர்களுக்கும் த ஸ்ராண்ட்டட் கிறெடிற் பினான்ஸ் லிமிட்டெட் 2,125 வைப்பாளர்களுக்கும் என முறையே 1,187.5 மில்லியன் மற்றும் 878.2 மில்லியன் அளவான இழப்பீடுகளை வழங்கக்கூடியதாக இருந்தது. 2019 செப்தெம்பரில் நாணயச்சபையால் உரிமம் இரத்துச் செய்யப்பட்ட ரி.கே.எஸ் பினான்ஸ் லிமிட்டெட்டின் வைப்பாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் எதிர்காலத்தில் விரைவாக ஆரம்பிக்கப்படும்.

### அபிவிருத்தி நிதி மற்றும் நிதியினை அணுகும் வழிவகைகள்

- **நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர மட்டத்தில் தொழில்முயற்சியாளர்களை வசதிப்படுத்தி நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதனூடாக உட்சேர்க்கின்ற மற்றும் சமநிலையான பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்கு ஏதுவாக பல்வேறு புதிய கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதனூடாக அபிவிருத்தி நிதி மீதான அதன் கொள்கையினை மத்திய வங்கியானது தொடர்ச்சியாக மேம்படுத்தி வருகின்றது.** மத்திய வங்கி, இலங்கை அரசாங்கம், பன்னாட்டு கொடையாளி முகவராண்மைகள் அத்துடன் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்கள் என்பவற்றின் மூலம் நிதியளிக்கப்பட்ட பல்வேறு மீள் நிதியளித்தல், வட்டி உதவுதொகை மற்றும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் போன்றவற்றினை மத்திய வங்கி தொடர்ந்தும் ஒருங்கிணைத்து வசதிப்படுத்தி நடைமுறைப்படுத்தியது. 2019ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியளவில் மத்திய வங்கியானது ஒன்பது மீள்நிதியிடல் கடன் திட்டங்கள் மற்றும் இரண்டு வட்டி உதவுதொகைத் திட்டங்களின் கீழ் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினூடாக 69,103 நன்மைபெறுநர்களுக்கிடையில் ரூ.9,910.2 மில்லியன் பெறுமதியிலான கடன்களைப் பகிர்ந்தளித்தது. பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகையில் 65.1 சதவீதமானது வட்டி உதவுதொகைத் திட்டங்களினூடாகவும் மீதி 34.9 சதவீதம் மீள்நிதியிடல் கடன் திட்டங்களினூடாகவும் வழங்கப்பட்டன. குறிப்பிட்ட காலப்பகுதியில் அரசாங்கம், மத்திய வங்கி மற்றும் கொடையாளிகளினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் மொத்தத் தொகையில் முறையே 70.5 சதவீதம், 23.9 சதவீதம் மற்றும் 5.6 சதவீதமாகக் காணப்பட்டது. 2019ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் 63,321 நன்மைபெறுநர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் பகிர்ந்தளிப்புகளில் ரூ.6,984.1 மில்லியன் அல்லது 70.5 சதவீத பங்களிப்பின் மூலம் ஐந்து மீள்நிதியிடல் திட்டங்களையும் ஒரு வட்டி உதவுதொகைத் திட்டத்தையும் உள்ளடக்குகின்ற ஆறு திட்டங்களுக்கு இலங்கை அரசாங்கமானது தொடர்ந்தும் நிதியளித்தது.

- **வட்டி உதவுதொகைத் திட்டமாகவும் கொடுகடன் உத்தரவாதத் திட்டமாகவும் செயற்பட்ட புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் 2019ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க செயலாற்றமொன்றினைக் காண்பித்தது.**

அட்டவணை 8.9

நிதியிடல் மூலங்களின் அடிப்படையில் கடன் பகிர்ந்தளிப்புக்கள்

| நிதியிடல் மூலம் | பங்கு (%) | | | |
|---|---|---|---|---|
| | 2017 சன-செத் | | 2018 சன-செத் | |
| | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். |
| அரசின் நிதியிடல் | 93.3 | 72.2 | 91.6 | 70.5 |
| மத்திய வங்கியின் நிதியிடல் | 6.7 | 27.8 | 4.8 | 23.9 |
| கொடையாளர்களின் நிதியிடல் | 0.0 | 0.0 | 3.6 | 5.6 |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இத்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 55,000 கடன்களுக்கு 9.7 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ.6,415.6 மில்லியனாக 12.4 சதவீதத்தினால் அதிகரித்தது. 2018ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் அதன் கடன்வழங்கல் செயற்பாடுகளை தொடங்கிய சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமைகள் நிகழ்ச்சித்திட்டமானது 2019ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியமும் இலங்கை அரசாங்கமும் இணைந்து நிதியளித்த சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டமானது குறித்த காலப்பகுதியின்போது ரூ.552.6 மில்லியன் பெறுமதியான 2,503 கடன்களை வழங்கியது. செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் நன்மைபெறுநருக்கு சிறந்த பணியினை வழங்குவதற்கும் சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தினுடைய கொடுகடன் கூறு மீளமைக்கப்பட்டது. சிறு உடமையாளர் வேளாண்வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தினுடைய புதிய கடன் கூறானது இரண்டு அரச-தனியார் உற்பத்தியாளர் பங்குடமை, கடன் திட்டங்கள் (அதாவது, அரச-தனியார் உற்பத்தியாளர் பங்குடமை வேளாண்வியாபார மற்றும் அரச-தனியார் உற்பத்தியாளர் பங்குடமை இளையோர் கடன் திட்டங்கள்) மற்றும் மூன்று சுழல் நிதிக் கடன் திட்டங்கள் (அதாவது, சுழல் நிதி, வேளாண்வியாபார இளையோர்களுக்கான சுழல் நிதி மற்றும் சுழல் நிதி வருமானம் உழைக்கும் கடன் திட்டங்கள்) என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. மத்திய வங்கியானது நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் துறை மற்றும் வேளாண்மை அத்துடன் விலங்கு வேளாண்மைத் துறை என்பவற்றை இலக்காகக் கொண்ட முறையே இரு முதன்மைக் கடன் திட்டங்களான "சௌபாக்கியா-சுபீட்ச" கடன் திட்டம் மற்றும் வர்த்தக அளவிலான பாலுற்பத்தி அபிவிருத்திக் கருத்திட்டம் என்பனவற்றிற்கு தொடர்ந்தும் நிதியளித்தது. "சௌபாக்கியா-சுபீட்ச" கடன் திட்டத்தின் கீழ் தொழில்முயற்சியாளர்கள் மத்தியில் ரூ.2,335.2 மில்லியன் பெறுமதியான 3,254 கடன்களை பகிர்ந்தளித்தது.

- **பல்வேறு அபிவிருத்தி நிதி நடவடிக்கைகள் ஆயத்தநிலையிலுள்ளன.** நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்களுக்கும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கும் ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களினுடைய தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளுக்கும் நிதித் தேவைப்பாடுகளை வழங்குவதற்கு அபிவிருத்தி நிதியளித்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் என்பவற்றுக்கான புதிய அரசாங்க நிதியளிக்கப்பட்ட மீள்நிதியிடல் கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றது. மேலும், என்ரபிறைஸ் சிறி லங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுவதற்கு அரசாங்க நிதியளித்த பகுதியளவான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் அரச-தனியார் உற்பத்தியாளர் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய வங்கியும் நிதி அமைச்சும் ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திட்டன. தேயிலை மீள் பயிரிடலிலும் இறப்பர் புதிய பயிரிடல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருக்கும் சிறு உடமை விவசாயிகளுக்கு புதிய பயிர்களிலிருந்து உட்பத்தி ஈட்டப்படுகின்ற அத்தகைய நேரம் வரை சுயதொழில் அல்லது குறுங்கால வருமானம் ஈட்டும்

அட்டவணை 8.10

அரசினால் நிதியிடப்பட்ட கடன் திட்டங்களின் கடன் பகிர்ந்தளிப்புக்கள்

| கடன் திட்டம் | கடன் பகிர்ந்தளிப்புக்கள் | | | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 சன-செத் | | 2019 சன-செத் | | 2019 சன-செத் | |
| | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - சுழலும் நிதியம் | 9,668.0 | 482.1 | 7,852.0 | 388.3 | -18.8 | -19.5 |
| வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதியம் | 3,573.0 | 336.2 | - | - | -100.0 | -100.0 |
| சுவசக்தி | 1,608.0 | 332.9 | 138.0 | 44.7 | -91.4 | -86.6 |
| அத்வெல (கடன் திட்டம்) | 3,543.0 | 1,499.7 | 193.0 | 78.0 | -94.6 | -94.8 |
| சுயதொழில் ஊக்குவிப்பு முன்னெடுப்புக் கடன்திட்டம் - கட்டம் II | 216.0 | 99.8 | 138.0 | 57.5 | -36.1 | -42.4 |
| புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் | 50,146.0 | 5,709.0 | 55,000.0 | 6,415.6 | 9.7 | 12.4 |
| தொழிற்சாலைகளுக்கான தொழிற்படு மூலதனக் கடன் திட்டம்* | - | - | - | - | - | - |
| மொத்தம் | 68,754.0 | 8,459.7 | 63,321.0 | 6,984.1 | -7.9 | -17.4 |

* 2018 சனவரியில் நிறுத்தப்பட்டது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 8.11

மத்திய வங்கி கடன் திட்டங்களின் கடன் பகிர்ந்தளிப்புக்கள்

| கடன் திட்டம் | கடன் பகிர்ந்தளிப்புக்கள் | | | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 சன-செத | | 2019 சன-செத | | 2019 சன-செத | |
| | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். | கடன்களின் எண். | தொகை ரூ. மில். |
| சௌபாக்கியா | 4,627.0 | 2,996.9 | 3,254.0 | 2,335.2 | -29.7 | -22.1 |
| வர்த்தக அளவிலான பாற்பண்ணை | 275.0 | 262.7 | 25.0 | 38.3 | -90.9 | -85.4 |
| **மொத்தம்** | **4,902.0** | **3,259.6** | **3,279.0** | **2,373.5** | **-33.1** | **-27.2** |

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

நடவடிக்கைகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கு சலுகைக் கடன்களை வழங்குவதற்கு தேயிலை சிறு உடமையாளர் மற்றும் இறப்பர் புத்துயிரயளித்தல் வட்டி உதவுதொகைத் திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

- **மத்திய வங்கியானது பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்தான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளுடன் இலங்கைக்காக தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தும் உபாயத்தினை தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்து வருகின்றது.** மேலும், பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தினுடைய உதவியுடன் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீடு ஒன்றினை நடாத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை இறுதிப்படுத்துவதற்கான மூன்றாவது ஆலோசனைப் பணியானது 2019ஆம் ஆண்டு ஓகத்து மாத காலப்பகுதியில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன் 2019இன் இறுதியளவில் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை தொடங்குவதற்கு எதிர்பாக்கப்படுகின்றது. 2019ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் மத்திய வங்கியானது நிதியியல் அறிவு, தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் திறன் விருத்தி தொடர்பான 95 நிகழ்ச்சித்திட்டங்களை 10,500இற்கு மேற்பட்ட பங்குபற்றுநர்களுக்கு நடாத்தியது. இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பரந்துபட்ட பங்களிப்புக் காணப்பட்டதுடன் பங்குபற்றியவர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர் (70 சதவீதம் தொடக்கம் 80 சதவீதம் வரை).

## எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **மேம்பட்ட மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளின் விளைவாக வங்கிகளின் மூலதன மட்டங்கள் மேலும் வலுப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.** 2020 திசெம்பர் 31 முதல் நடைமுறைக்குவரும் மேம்படுத்தப்பட்ட குறைந்தபட்ச மூலதன மட்டங்கள் மற்றும் பாசல் III மூலதனத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் உயர்தர மூலதனத்திற்கான மேலதிகத் தேவையை வங்கிகள் பூர்த்திசெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்கு இணங்க முடியாதவர்கள் தன்னார்வ அடிப்படையில் ஒருங்கிணைக்க ஊக்குவிக்கப்படுகின்றனர் அல்லது வங்கித்தொழிற்பாடுகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். மேலும், பாசல் III இன் முடுக்கி விகிதம் மற்றும் புதிய கணக்கீட்டு நியமம் - இலங்கை கணக்கீட்டு அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்கள் என்பனவற்றின் நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் விளைவாக ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான மூலதன அளவை வங்கிகள் அதிகரிக்க வழிவகுக்கும். இது நிதி மற்றும் பொருளாதார அழுத்தங்களிலிருந்து எழும் அதிர்ச்சிகளை உள்வாங்குவதற்கான வங்கித்தொழில் துறையின் திறனை மேம்படுத்துவதோடு, இனிவரும் ஆண்டுகளில் நிதியியல் துறையிலிருந்து உண்மைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் அபாயத்தையும் குறைக்கும்.

- **பாசல் III இன் திரவத்தன்மை நியமங்களின் கீழ் திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் மற்றும் நிகர நிலையான நிதியிடல் விகிதம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வங்கிகளின் திரவத்தன்மை ஆரோக்கியமான மட்டத்தில் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.** இதன்படி, குறுகிய கால மற்றும் நீண்ட காலங்களிற்கான வங்கிகளின் திரவத்தன்மை நிலையான நிதி வளங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படும்.

- **பொருளாதாரத்திற்கான கொடுகடன் பாய்ச்சலை அதிகரிப்பதற்காக வெளியிடப்பட்ட நடைமுறையிலுள்ள நாணயக் கொள்கை பணிப்புரை மற்றும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கேற்ப வங்கித்தொழில் துறையின் கொடுகடன் வளர்ச்சியானது அண்மைக் காலத்தில் படிப்படியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.** கொள்கை வட்டி வீதங்களைக் குறைத்தல் மற்றும் நியதி ஒதுக்கு வீதங்களைக் குறைத்தல் போன்ற நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கேற்ப வட்டி வீதங்களைக் குறைக்க மத்திய வங்கி அண்மைக் காலத்தில் நடவடிக்கை எடுத்தது. இந்த நடவடிக்கைகள் கடன் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் ஒரு தூண்டுதலாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய தொழிற்பாட்டுச் சூழலிலுள்ள சவால்கள் காரணமாக செயற்படாக் கடன்களில் ஏற்பட்ட படிப்படியான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டுள்ளதுடன், கடன் அதிகரிப்புடன் தொடர்புடைய செயற்படாக் கடன்களின் அதிகரிப்பு குறித்து வங்கிகள் எச்சரிக்கையாக இருப்பதுடன் தொடர்புடைய அனைத்து இடர்நேர்வுகளைக் குறைக்கச் சரியான இடர்நேர்வு முகாமைத்துவம் பேணப்படுகிறது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

- **உண்மைப் பொருளாதாரத்திலிருந்து வங்கித்தொழில் துறைக்கு எழும் எந்தவொரு இடர்நேர்வுகளையும் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு**

**பேரண்டப் பொருளாதார மாறிகள் கண்காணிக்கப்படும்.** அதன்படி, எந்தவொரு பாதகமான சூழ்நிலைகளிலிருந்தும் வங்கி அமைப்பின் உறுதிப்பாட்டிற்கு எதிர்காலத்தில் ஏற்படும் இடர்நேர்வுகளை தேவைப்படின் முன்கூட்டியே அகற்றுவதற்குப் பொருத்தமான பேரண்ட முன்மதியுடைய நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படும். உரிமம் பெற்ற வங்கிகள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பானது வினைத்திறனான வங்கி மேற்பார்வை மற்றும் ஏனைய பன்னாட்டு மற்றும் பிராந்திய சிறந்த நடைமுறைகள் மற்றும் பாசல் மையக் கோட்பாடுகளிற்கேற்ப மேலும் பலப்படுத்தப்படும்.

- **புதிய வங்கித்தொழில் சட்டத்தின் வரைவு மூலம் உரிமம் பெற்ற வங்கிகளின் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்படும்.** புதிய வங்கித்தொழில் சட்டத்திற்கு முன்மொழியப்பட்டுள்ள முக்கிய விடயங்களில் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கான முழுமையான ஒழுங்குமுறை விதிகள், விகிதாசாரத்திற்கு வசதியளிப்பதற்கான மாறுபட்டதொரு ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில் கம்பனி ஆளுகையை வலுப்படுத்தல், ஒருங்கிணைந்த மேற்பார்வை, தீர்மானம், நிதியியல் ரீதியான அபராதம் விதித்தல், பரவுகின்ற இடர்நேர்வைக் குறைப்பதற்கு வங்கிகளுக்கான பாதுகாப்பு வலயம், இணைப்புக்களுக்கா ஏற்பாடுகளை வலுப்படுத்தல், கையகப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல், பெரிய வெளிநாட்டு வங்கிகளின் துணைமயமாக்கல் மற்றும் வங்கிகளுக்கான நிதியியல் உரிமைக் கட்டமைப்பு என்பன உள்ளடங்குகின்றன.

- **தனித்தனி வங்கிகள் மற்றும் வங்கித்தொழில் துறையின் வினைத்திறன், செயற்றிறன் மற்றும் நிலைத்திருக்கும் தன்மை என்பவற்றைக் கருத்தில் கொண்டு வங்கிகளின் பரீட்சிப்பு முறைமை தொடர்ச்சியாக மேம்படுத்தப்படுகின்றது.** உரிமம் பெற்ற வங்கிகளின் இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வைக் கட்டமைப்பிற்கு வசதியளிக்கும் முகமாக இலங்கை மத்திய வங்கியால் ஒரு புதிய மேற்பார்வைத் தரமிடல் கட்டமைப்பு (வங்கி நிலைத்திருத்தல் தரமிடல் குறிகாட்டி) உருவாக்கப்படுவதுடன், உரிமம் பெற்ற வங்கிகள் மீதான ஆரம்பத் தலையீடு மற்றும் சரியான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும்.

- **பரவுகின்ற இடர்நேர்விலிருந்து வங்கிகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, வங்கித்தொழில் துறை மற்றும் நிதி அமைப்பின் உறுதித்தன்மை மற்றும் பாதுகாப்பான தன்மையை உறுதி செய்வதற்காக வங்கிக் குழுமங்களின் மீது ஒருங்கிணைந்த மேற்பார்வை மேற்கொள்ளப்படும்.** அதன்படி, ஒருங்கிணைந்த மேற்பார்வை குறித்த ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை வகுத்து, இது தொடர்பான ஏற்பாடுகள் வங்கித்தொழில் சட்டத்திலும் கொண்டு வரப்படும். மேலும், ஒழுங்கமைப்புக் கட்டமைப்புக்களுக்கிடையேயான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைவை வலுப்படுத்துவதற்காக, மத்திய வங்கி, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஆகியவை இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட ஒருங்கிணைந்த மேற்பார்வை தொடர்பில் முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டதுடன் இதில் மத்திய வங்கி முதன்மையான ஒழுங்குபடுத்துநராக விளங்கும்.

- **பின்டெக்கின் தோற்றம் மற்றும் டிஜிட்டல் பேரரேட்டு முறைமை போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களின் காரணமாக வங்கிகளின் வணிக மாதிரிகள் புதிய வாய்ப்புக்களை உருவாக்கி காலப்போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தலாம்.** இத்தொழில்நுட்ப வளர்ச்சி வங்கித்தொழில் துறையில் புதிய இடர்நேர்வுகளின் தோற்றத்திற்கு வழிவகுக்கும். அதன்படி, வங்கித்தொழில் முறையின் பாதுகாப்பு மற்றும் உறுதித்தன்மையை பேணக்கூடியவாறு புதிய தொழில்நுட்பங்களை இணைத்துக் கொள்வதற்கு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

- **சைபர் பாதுகாப்பிலான அதிகரித்த இடர்நேர்வுகளினால் பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் வங்கிகளுக்கான சைபர் பாதுகாப்பு தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல்கள் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பிற்கான மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்படும்.** இம்முன்மொழியப்பட்ட ஒழுங்குமுறைகள், வங்கிகளுக்கான தகவல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வங்கிகள் தங்களது தகவல் அமைப்புக்கள் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பத் தளங்களை மேம்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படும். 2019ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் தொழில்நுட்ப இடர்நேர்வு ரீதியான பின்னடைவுகளை மேம்படுத்துவதற்கு வங்கிகளுக்கு மத்திய வங்கி ஒரு வழிகாட்டலை வழங்கியுள்ளது. மேலும், தொழில்நுட்ப இடர்நேர்வுகளுக்குத் தாக்குப்பிடிக்கும் தன்மை தொடர்பில் ஒரு ஆலோசனைப் பத்திரம், வங்கிகளின் கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்களுக்காக வெளியிடப்பட்டுள்ளதுடன்,

இது தொடர்பான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் விரைவில் வெளியிடப்படும்.

- **நாடு முழுவதும் நிதியியல் உள்வாங்கல்களை மேம்படுத்தல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுதல் போன்ற நோக்கத்துடன் வங்கித்தொழில் துறையானது வங்கித்தொழில் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் தன்மையினை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** தகவல் தொழில்நுட்பத்தை ஒரு பணி விநியோக ஊடகமாக அதிகரிப்பதன் மூலம் செல்லிட/ தொலைபேசி வங்கி மற்றும் இணைய வங்கி போன்ற டிஜிட்டல் முன்முயற்சிகளால் வங்கித்தொழில் அணுகலை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. தோற்றம் பெற்றுவரும் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதற்கு வங்கிகள் அனைத்து அமைப்பு முறைகளுடன் தொடர்புபட்டு தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்தை வலுப்படுத்த தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பெரிய வணிக வங்கிகள் பிராந்திய விரிவாக்கத்திற்கான வழிகாட்டல் ஊக்குவிக்கப்படுவதுடன் இது வங்கித்தொழில் துறையில் புவியியல் ரீதியான அதிகரிப்புக்கு வழிவகுக்கும். எனவே, ஒழுங்குமுறைப்படுத்துநர்களுக்கிடையிலான தகவல் பகிர்வு மற்றும் எல்லைக்கு அப்பாற்பட்ட மேற்பார்வை என்பனவற்றை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு ஏனைய பிராந்திய ஒழுங்குமுறைப்படுத்துநர்களுடன் நெருக்கமான தொடர்புகள் பேணப்படும்.

- **இலங்கையில் அண்மையில் தொடங்கப்பட்ட நிலைத்திருக்கும் நிதிக்கான வழிகாட்டல், நிதிக் கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு அவர்கள் நிதியளிக்கும் திட்டங்களுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல், சமூக மற்றும் கம்பனி ஆளுகை தொடர்பான இடர்நேர்வுகளை வினைத்திறனான முறையில் முகாமை செய்ய பரந்த வழிகாட்டலை வழங்குவதுடன், பசுமையான, காலநிலையுடன் இசைந்து செல்லும் மற்றும் சமூக உள்வாங்கலைக் கொண்ட வணிக நடவடிக்கைகளை அதிகரிக்க உதவியளிக்கின்றது.** ஆகவே, வங்கித்தொழில் துறை புதிய நிலையான நிதித் தயாரிப்புக்கள் மற்றும் பணிகளின் உருவாக்கத்தை முன்னெடுப்புடன், நிலையான நிதிக்கான வணிக இயக்கிகளை உருவாக்க உதவுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. தேவையானவிடத்து, பசுமைப் பொருளாதாரத்தை மேம்படுத்த மத்திய வங்கி இத்தகைய நடவடிக்கைகளுக்கு உதவும்.

- **வங்கிகளின் மூலதனம் மற்றும் திரவத்தன்மை நிலைமைகள் என்பனவற்றை வலுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், இடர்நேர்வு முகாமைத்துவத்தில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்கள், தொழில்நுட்பப் பாதுகாப்பு, கம்பனி ஆளுகை மற்றும் நிலையான பேரண்டப் பொருளாதார அடிப்படைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும் போது வங்கித்தொழில் துறையின் இடர்நேர்வுகளுக்குத் தாக்குப்பிடிக்கும் தன்மை அதேநிலையில் பேண வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.**

- **ஏற்கனவேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்கு மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் நடுத்தரகாலப்பகுதியில் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறையின் உறுதிப்பாடு மேலும் வலுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்திற்கு மாற்றங்கள் முன்மொழியப்பட்டிருப்பதுடன் 2020இன் பின்னரைப்பகுதியில் இறுதிப்படுத்தப்படவுள்ளது. இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 உடன் இசைந்துசெல்லும் விதத்தில் கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தலையும் அளவுமுறைகளையும் இணைப்பதற்கான ஏற்பாடுகளின் மீதான பணிப்புரைகளின் வரைவு நிறைவடைந்திருப்பதுடன் வங்கிகளுடன் ஒப்பிடுகையில் வேற்றுமைகள் குறைவாகக் காணப்பட்டது. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் மேற்பார்வையினையும் ஒழுங்குபடுத்தல்களையும் வலுப்படுத்துவதற்காக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு திருத்தியமைக்கப்படும்.

- **மூலதனத் தேவைப்பாடுகள் அதிகரிக்கப்பட்டமையின் விளைவாக மூலதனத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் இத்துறையின் மூலதன மட்டங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.** இத்துறையின் அதிகரிக்கப்பட்ட மூலதன மட்டங்கள் அழுத்தத்திற்குரிய காலப்பகுதியில் அதிர்வுகளை ஈர்த்துக்கொள்ளும் இயலாற்றலை மேம்படுத்தும். இலங்கை நிதியிடல் அறிக்கையிடும் நியமம் 9இன் கீழ் உறப்பட்ட கொடுகடன் இழப்புக்களுக்கு எதிராக எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் அங்கீகரிக்கப்படுவதனால் பழுதுறும் கட்டணங்கள் அதிகளவில் தேவைப்படுத்தப்படுகின்றன. இது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படவுள்ள மூலதன பெருக்க திட்டங்களின் மீது கவனத்தைச் செலுத்தும். இது குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிடையே தன்னிச்சையான இணைப்புக்களை ஊக்குவிக்கும்.

- **இத்துறைக்காக பொருத்தமான தீர்மானக் கட்டமைப்பொன்று நிறுவப்படவுள்ளது.** நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, இடர்பாட்டிலுள்ள கம்பனிகளின் தீர்விற்காக தற்பொழுது முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்பொழுது உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ள நிதிக் கம்பனிகளின் வைப்பாளர்களது கணக்குகளை தீர்ப்பனவு செய்கின்ற செயன்முறை இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத்திட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இடர்ப்பாட்டிலுள்ள நிதிக் கம்பனிகள் தொடர்பில் விரைவான தீர்மான நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதற்காக மத்திய வங்கியின் தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் நிதித்தொழில் சட்டத்திற்கு திருத்தங்களை முன்மொழிந்துள்ளது.
- **சொத்துரிமையில் வரையறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கம்பனி ஆளுகைகள் வலுப்படுத்தப்படவுள்ளன.** சொத்துடைமையும் தீர்மானங்களை மேற்கொள்வதும் ஒரு பிரதான உடமையாளரிடம் அல்லது பிரதான உடைமையாளர் இணைக்கப்பட்ட ஒரு சில பங்குடைமையாளரிடம் குவிந்து காணப்படுகின்ற தீர்மானங்களை எடுக்கும் கம்பனி ஆளுகையானது நிதிக் கம்பனிகள் முறிவடைவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. நடைமுறைப்படுத்துவதற்கு நியாயமான காலங்களை வழங்குவதன் மூலம் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான சொத்துடைமை வரையறைகளின் மீது பணிப்புரைகளை வழங்குவதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது. எனினும், இடர்பாட்டிலுள்ள கம்பனிகளில் முதலீடு செய்த முதலீட்டாளர்களுக்கு அத்தகைய கம்பனிகளை மீளமைப்பதற்காக சலுகைகள் வழங்கப்படும்.
- **உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளில் சிறந்த கம்பனி ஆளுகை நடைமுறைகளை வலுப்படுத்தவதற்காக கம்பனிகளில் ஏற்கனவேயுள்ள பணிப்புரைகள் திருத்தப்படும்.** வலுவான கம்பனி ஆளுகை செயன்முறைகளும் நடைமுறைகளும் பொறுப்புமிக்க மற்றும் பொறுப்புக்கூறத்தக்க விதத்தில் நிதி வியாபாரத்தினைக் கொண்டு நடாத்துவதற்கு வசதியளிக்கின்ற முகாமைத்துவக் கட்டமைப்பொன்றாக விளங்கும் என கருதப்படுகின்றது. இதன்மூலம், தனிப்பட்ட கம்பனிகளின் பாதுகாப்பும் ஆற்றல்வாய்ந்த தன்மையும் மேம்படுத்தப்படுவது முழுத்துறையினதும் உறுதிப்பாட்டிற்கு வழிவகுக்கும். உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் காத்திரமான தொழிற்பாடுகளையும் முகாமைத்துவத்தினையும் மேம்படுத்துவதற்காக நியமங்களை எடுத்துக்காட்டுகின்ற மிகக்கடுமையானதும் திருத்தப்பட்டதுமான பணிப்புரையை விடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- **இலங்கை மத்திய வங்கியும் நிதி அமைச்சும் இணைந்து நாட்டுக்கான நடுத்தர காலப் படுகடன் முகாமைத்துவ உபாயமொன்றினை உருவாக்கின.** 2019 ஏப்பிறலில் இது மத்திய வங்கியின் வெப்தளத்தில் வெளியிடப்பட்டது. அரசாங்கத்தின் நிதியளித்தல் தேவைப்பாடுகள் முன்மதிமிக்க இடர்நேர்வு மட்டமொன்றுடன் குறைந்த சாத்தியமான செலவில் நிறைவேற்றப்படுகின்றது என்பதை உறுதிசெய்வதற்கு அரசாங்கத்தின் காசுப்பாய்ச்சல் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியங்களைப் பொருத்தமான தொகுப்பொன்றில் திரட்டுவதற்கு இப்புதிய உபாயம் வசதியளிக்கும்.
- **நடுத்தர கால அரசாங்கப் படுகடன் உபாயமானது வெளிநாட்டு நாணய திறந்த நிலையினை தற்போதைய மட்டத்தில் பேணுவதனையும் வெளிநாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலின் சராசரி முதிர்வு காலத்தை தற்போதைய மட்டத்திலிருந்து அதிகரிப்பதனையும் அத்துடன் ஒரு ஆண்டில் முதிர்ச்சியடைகின்ற படுகடன் பங்கினை நடைமுறை மட்டத்திலிருந்து குறைப்பதனையும் முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது.** இதற்கு மேலதிகமாக, நடுத்தரகாலப் படுகடன் உபாயமானது 2023ஆம் ஆண்டளவில் மொ.உ.உ.உற்பத்தி விகிதத்திலான படுகடன் இருப்பினை ஏறத்தாள 71.0 சதவீதமாக படிப்படியாகக் குறைப்பதற்கும் திட்டமிடுகின்றது. முன்மொழியப்பட்ட உபாயமானது நடுத்தர காலத்தில் அரசாங்கத்தின் வெளிநாட்டு நிதியளித்தல் தேவையினைக் குறைக்கின்ற அதேவேளை, வெளிநாட்டு நாணய திறந்த நிலையுடன் இணையப்பெற்ற இடர்நேர்வினை 2018இல் அவதானிக்கப்பட்ட மட்டத்தில் நிறுத்துவதற்கு குறுகிய கால முதிர்வுகளிலிருந்து நடுத்தர மற்றும் நீண்ட கால முதிர்வுச் சாதனங்களுக்கு மாற்றுவதற்கும் ஒரு ஆண்டில் முதிர்வடைகின்ற படுகடன் பங்கினை 2018இன் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 16.4 சதவீதத்திலிருந்து 2023 அளவில் ஏறத்தாள 15.7 சதவீதமாக குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், படுகடன் இருப்பின் சராசரி முதிர்வுகாலத்தினை நீடிக்கின்ற அதேவேளை, நடுத்தர காலத்தில் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகளைக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. நாணய நோக்கில், உற்பத்தித்திறன் அதிகரிக்கின்ற வழங்கல் பக்க வழிமுறைகளால் துணையளிக்கப்பட்ட, முன்மதியுடைய நாணயக் கொள்கையினை கொண்டு நடாத்துவதனூடாக பணவீக்கத்தினை நடுத்தர காலத்தில்

ஏறத்தாள நடு தனி இலக்கத்தில் பேணுவதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது. அரசாங்கத்தின் நடுத்தரகால இறைத் திரட்டல் நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒன்றிணைந்த இக்கொள்கைகளின் ஒன்றிணைப்பானது நடுத்தர காலத்தில் முன்மதியுடைய படுகடன் உபாயமொன்றினை வசதிப்படுத்தி, சந்தை வட்டி வீதங்கள் பொருத்தமான மட்டத்தில் நிலவுவதற்கு இயலச்செய்யும்.

- **அதேவேளை, 2018 மாச்சில் பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்பட்ட 2018இன் 8ஆம் இலக்க தீவிரப் பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் பொறுப்பு முகாமைத்துவ நோக்கங்களுக்காக ரூ.480 பில்லியன் வரையான தொகையினைத் திரட்டுவதற்காக 2019 யூலையில் தீர்மானமொன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.** இது தொடர்பில், பொதுப் படுகடன் திணைக்களமானது பன்னாட்டு மூலதன சந்தை வழங்கல் தளத்தினை பன்முகப்படுத்துவதற்கும் உள்நாட்டுச் சந்தையில் தேவையான தாங்கியிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கும் இதனூடாக பொறுப்பு முகாமைத்துவ முயற்சிகளின் கீழ் எதிர்கால கடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளைச் சீரமைப்பதற்கும் சாமுராய் முறிச் சந்தை உள்ளடங்கலாக மாற்றுவழி முறிச் சந்தைகளைக் கண்டறிகின்ற செயன்முறையினை முன்னெடுக்கின்றது.

- **பின்டெக் அபிவிருத்திகள் தொடர்பாக குழுவினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களின்படி ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை மீறுகின்ற இடர்நேர்வுகளின் புத்தாக்கங்களை மேற்கொள்வோர் தமது சாதனங்களையும் பணிகளையும் பரீட்சிப்பதற்காகக் கட்டுப்படுத்தப்பட்ட சூழலொன்றில் பாதுகாப்பான வசதியொன்றினை வழங்கும் பொருட்டு பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பொன்று நடைமுறைக்கிடப்படும்.** இச்செயன்முறையானது புத்தாக்கங்களை மேற்கொள்வோர் தாமாகாவே ஒழுங்குமுறைப்படுத்தலுக்கான ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கு சிறந்த கருவிகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது. மேலும், இலத்திரனியல் பயணச்சீட்டுக்கள் மற்றும் தேசிய மட்டத்தில் போக்குவரத்துத் துறைக்கான கட்டண சேகரிப்பு முறைமையொன்றினை தொடங்குவதற்கு போக்குவரத்து அதிகாரிகளுக்கு இலங்கை மத்திய வங்கியானது உதவியினை வழங்கும். டிஜிட்டல் பேரேட்டுத் தொழில்நுட்பத்தை பயில்வதற்கு தொழிற்பாட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின்படி டிஜிட்டல் பேரேட்டுத் தொழில்நுட்பத்திற்கான செயற்குழு நியமிக்கப்பட்டதுடன் டிஜிட்டல் பேரேட்டுத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் பகிரப்பட்ட உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்துகொள்ளுங்கள் தீர்விற்கு வசதியளிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது. ஆரம்பத்தில் கருதுகோள் ஒன்று வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள் தீர்வினைப் பகிர்ந்து கொள்வதற்காக விருத்தி செய்யப்படமுடிந்தது. அதற்கு மேலதிகமாக, டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களினுடைய வினைத்திறன் மற்றும் பாதுகாப்பினை ஊக்குவிக்கும் நோக்கில் பின்டெக் குழுவின் மீதான அபிவிருத்திக் குழுவின் மற்றைய முன்மொழியப்பட்ட முயற்சிகளை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய கொடுப்பனவு தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிதியியல் துறை விருத்திக்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் வலிமைக்கும் வசதியளிப்பதற்கு மத்திய வங்கி எதிர்பார்க்கின்றது.